நமது ஈழநாடு
www.namathueelanadu.com

குரல் 03 மலர் 31 மார்ச் 2023 மின்னஞ்சல்:: contact@namathueelanadu.com இணையம்:: www.namathueelanadu.com

Simply Scan the QR code Your Phone Camera
Download the NamathuEelanadu app

"எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது"

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்



# சூறையாடப்படும் அடையாளங்கள்



# தொடரும் திட்டமிட்ட தாயக ஆக்கிரமிப்பு

-தாயகன்-

கிளிநொச்சி ஆனையிறவு பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 27 அடி உயரமான நடராஜர் சிலை கடந்த 12ஆம் திகதி முற்பகல் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் கீழ் உள்ள ஆனையிறவு பகுதியில் சுமார் 27 அடி உயரமான நடராஜர் சிலை இவ்வாறு பிரதிஷ்டை செய்யப்பட்டதோடு அது சிறிலங்காவில் அதியுயரமான சிலைகளுள் ஒன்றாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் பிரதான தபாலகத்திற்கு முன்பாகவுள்ள சுற்று வட்டத்தின் நடுவே திருவள்ளுவரின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. கடந்த 17ஆம் திகதி திருவள்ளுவரின் சிலை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சுற்று வட்டத்தினை மீளமைத்து அழகுபடுத்தப்பட்டு சுற்று வட்டத்தின் நடுவே திருவள்ளுவர் திருவுருவச்சிலை பிரதிஷ்டை செய்வதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் கடந்த வருடம் மே மாதம் 29ஆம் திகதி நடைபெற்றிருந்தது.




அடுத்தடுத்து நிகழ்ந்த இரு நிகழ்வுகளும், வடக்கு மாகாணம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. அதாவது, நடராஜர் சிலை நிறுவப்பட்டமையும், திருவள்ளுவருக்கு விபூதி பூசப்பட்டமையும் தமிழர்களை இந்துக்களாக அடையாளப்படுத்தும் ஒரு திட்டமிட்ட முயற்சி என்ற ஐயப்பாடுகள் முதலில் வெளியிடப்பட்டன.

பின்னர், அந்தச் சிலைகள் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டமையால், இந்தியாவின் இந்துத்துவா கொள்கையை யாழ்ப்பாணத்தில் பரப்பும் ஒரு முயற்சியாக பார்க்கப்பட்டது. அதுமட்டுமன்றி, இந்தியாவில் உள்ள அதி தீவிர இந்துத்துவா கொள்கையுடைய ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் திரைமறைவுசெயற்பாட்டில் தான் அனைத்தும் அரங்கேறியுள்ளதாகவும் கணக்குப்போடப்பட்டது.

அதனைவிடவும் ஒருபடி மேலேசென்று இந்திய மத்திய அரசான பாரதீய ஜனதாக் கட்சி தனது மேலாண்மையை யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கில் சனாதர்மக் கொள்கையின் பால் இந்துத்துவா பிரசாரத்தினை நீட்சிக்கின்றது என்றும் கற்பிதங்கள் செய்யப்பட்டன.

திருவள்ளுவர் தமிழரா, இந்துவா, நடராஜர் சிலை ஆர்.எஸ்.எஸ் நீட்சியா என்றெல்லாம் வாதப்பிரதிவாதங்கள் வடபகுதி தமிழ் மக்கள் தேசமாக திரள்வதை உடைத்தெறியும் என்றெல்லாம் கருத்தாகவே கொள்ளாது நீடித்துக்கொண்டிருக்கையில் கடந்த 18ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தின் முழுமையான துணையுடன் பௌத்தத்தின் பெயரிலான ஆக்கிரமிப்பொன்று கனகச்சிதமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாவற்குழியில் 2019ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் திகதி இராணுவம் உட்பட முப்படைகளின் பலத்த பாதுகாப்பின் மத்தியில் யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைக்கப்பட்ட நல்லிணக்க விகாரை என அழைக்கப்பட்ட சம்புத்தி சுமண விகாரை திறந்துவைக்கப்பட்டது.

குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு சுமார் மூன்றரை ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் தற்போது அந்த விகாரையின் கலசத் திறப்பு விழா இடம்பெற்றிருக்கின்றது. இந்த திறப்பு விழாவிற்கு பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருக்கின்றார் போர்க்குற்றவாளியான சிறிலங்கா முப்படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா.

நாவற்குழி பிரதேசத்தில் வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணியில் படையினரால் 28 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளபோதும் அந்த வீடுகளில் வெறுமனே 9 சிங்கள குடும்பங்கள் மட்டுமே வசித்து வந்த நிலையில் அந்தக் குடும்பங்கள் வழிபாடுகளை நடத்துவதற்காகவெனக் காரணம் கூறி அங்கு பாரிய விகாரையொன்றை அமைக்கும் பணி 2017இல் ஆரம்பமானது.

இந்த மக்கள் அங்கு மீளக்குடியேறிய 2010ஆம் ஆண்டு முதலே சிறிய அளவில் மண்டபமொன்றில் வழிபாடுகளை முன்னெடுத்துவந்த நிலையில் அதனை மையப்படுத்தி நிர்ணமானப்பணிகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டது.

ஆரம்பத்தில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் அனுமதி எடுக்கப்படவில்லை என்று தடைபோடப்பட்டது. எனினும் தடுக்க முடிந்திருக்கவில்லை. வடமாகாண சபை செயற்பாட்டில் இருந்தபோதும், காணி அதிகாரத்தினை கையாளுவதற்கான அங்கீகாரம் மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருக்காமையால் மாகாண சபை இந்த ஆக்கிரமிப்பு விடயத்தில் இயலாமைக்குரிய கட்டமைப்பாகவே செயலாற்றியிருந்தது

பின்னர், பிரதேச சபை எதிர்ப்பு தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்தது. நீதிமன்றத்தின் ஊடாக தடைபோட்டுவிட முடியும் என்று தமிழ் தரப்புக்கள் கங்கணம் கட்டின.



ஆனால் அப்போதைய சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன், சட்டப்படி வழங்கிய தீர்ப்பு அனைத்தையும் புரட்டிப்போட்டது.

சிறிலங்காவில் தற்போதிருக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் 9ஆம் சரத்தின் பிரகாரம் பௌத்த மதத்திற்கான முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். இதனடிப்படையில் பிரதேச சபையின் சட்டம் இரண்டாம் பட்சமாகவே கருதப்படும். இதனால் விகாரையின் பணிகளை முன்னெடுக்குமாறு நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது' என்று அவர் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவு விகாரை எழுவதை தடுத்து நிறுத்துவதற்கு எந்தவொரு முனைப்பையும் செய்யமுடியாதவொரு கையறு நிலையை தமிழ் தரப்புக்கு ஏற்படுத்தியது. இருப்பினும், நீதித்துறையும், நிருவாகத்துறையும் இயலாமையில் இருந்த தருணத்தில் தமிழ்த் தரப்பு அரசியல் அதிகாரத்தினை மையப்படுத்தி இந்த விடயத்தில் தீவிரமாக செயற்பட்டிருக்கலாம்.

ஆனால், அப்போது மைத்திரி-ரணில் அரசுடன் கொண்டிருந்த தேனிலவுக்கால அரசியல் காரணமாக தமிழ் மக்களின் ஆணைபெற்ற கூட்டமைப்பு மௌனம் சாதித்துவிட்டது.

இவ்விதமான ஏது நிலைகளால் அப்போதைய வட மாகாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் வழிகாட்டலில் ஒட்டுமொத்த படைபலமும் பிரயோகிக்கப்பட்டு சொற்ப காலத்தில் விகாரை நிர்மாணப்பணிகள் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டன.

தொடர்ந்து, குறித்த விகாரையின் விகாராதிபதியாக ஹன்வெல்ல ரத்னசிறி தேரர் நியமிக்கப்பட்டதோடு, நயினைதீவு நாகவிகாரதிபதி நவந்தகல பதுமகீர்த்தி தேரர் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டு குருணாகல் நெவகட செல்கிரி விகாரையில் இருந்து விகாரைக்கான புனித தாது எடுத்துவரப்பட்டு கோலாகலமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டபோது, அரசியல் கட்சிகளோ, சதாரண பொதுமக்களோ எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியிருக்கவில்லை. இவ்விதமான பிற்கு போக்கான நிலை, தொடர்ச்சியாக அந்த விகாரையின் நிர்மாண மேம்பாட்டுக்கு வழிவகுத்துள்ளதோடு தற்போது கலசத்தை ஜெனரல் சவேந்திர சில்வா நேரில் பங்கேற்று திறந்து வைக்குமளவிற்கு நிலைமைகளை மோசமடையச் செய்திருக்கின்றது.

இவ்வாறான நிலையில், எதிர்காலத்தில் இந்த விகாரையை மையப்படுத்திய பௌத்த நிகழ்வுகள் பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்படவுள்ளன. அப்போதெல்லாம் படைகளின் பாதுகாப்புடன், ஒத்துழைப்புடன் அவை இடம்பெறவுள்ளன என்பது வெளிப்படையான உண்மையாகின்றது.

இப்போது குறித்த விகாரையின் நிர்மாணம் நிறைவுக்கு வந்துவிட்டதன் பின்னர் போராட்டம் நடத்துவதாலோ எதிர்ப்பினை வெளியிடுவதாலோ ஜனாதிபதிக்கு கடிதம் எழுதுவதாலோ நடப்பதற்கு ஒன்றுமில்லை.

ஆனால், இந்த விகாரையை மையப்படுத்தி அடுத்துவரும் காலத்தில் மேலும் பல சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படலாம். அருகில் வெற்றுக் காணிகள் தாராளமாகவே உள்ள நிலையில் குடியேற்றப்பணி மிகத் தீவிரப்படுத்தப்படலாம். அதனை தடுத்து நிறுத்த வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

ஆகவே, போர்க்குற்றவாளி சவேந்திர சில்வா வந்தார். அவரை எதிர்த்தோம் என்பதெல்லாம் விடயமல்ல. அடுத்துவரவிருக்கின்ற பேராபத்தினை தடுப்பதற்கு இப்போதே வியூகங்களை வகுக்க வேண்டும்.

ஆனால், நாவற்குழி விகாரையின் கல அங்குராட்பணத்தில் ஜெனரல் சவேந்திர சில்வா பங்கேற்றதன் மூலமாக, சிறிலங்காவில் சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்பு படைகளின் துணையுடன் தான் நடைபெறுகின்றது என்ற செய்தியை அண்மைய உதாரணத்துடன் ஒட்டுமொத்த சர்வதேசத்திற்கும் எடுத்துரைக்க முடியும். ஆனால் அது நீட்சி அடையவிடாது தடுப்பதே பிரதான காரியமாகவுள்ளது.

ஏனென்றால், யாழ்.மாவட்டத்தில் 6 விகாரைகள், கிளிநொச்சியில் 3 விகாரைகள், மன்னாரில் 20 விகாரைகள், வவுனியாவில் 35 விகாரைகள, முல்லைத்தீவில் 67 விகாரைகள் என்ற வகையில் 131 விகாரைகள் வடக்கில் இருப்பதாக தொல்பொருள் திணைக்களத்தின் அறிக்கை கூறுகிறது.

இதனைவிடவும், படைமுகாம்களின் முன்னாலும், காவல்துறை நிலையங்களின் முன்னாலும் புத்தர் சிலைகள் தாராளமாக உள்ளன. அவை அடுத்துவரும் காலத்தில் பௌத்த விகாரைகளாக மேலெழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஆகவே, தொல்பொருள் திணைக்களத்தின் அறிக்கைக்கு அமைவாக மேலும் எங்கெங்கெல்லாம் விகாரைகள் மேலெழும்பப்போகின்றன என்பதை இனங்கண்டு அதற்குரிய தடுப்புச்சுவர்களை அமைப்பதே காலத்தின் தேவையாக உள்ளது. இல்லாது விட்டால் தொடரும் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்கு தாயகம் பலிக்கடா ஆவதை தவிர்க்க முடியாது போய்விடும்.



# புடினைவிட விஞ்சிய ஸ்ரீலங்கா இனப்படுகொலையாளிகள் மீது எப்போது நடவடிக்கை?

-தர்மன்-

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை கைது செய்யும் பிடியாணையை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் பைடன் வரவேற்றுள்ளார். உக்ரைன் நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தத்திற்கு எதிரான நடவடிக்கை இந்தளவுக்கு வேகமாக இருப்பதற்கான காரணங்கள் வெளிப்படையானவை. என்ற போதும் உலகில் இதுபோன்ற கொடுமைகளும், இதனை விஞ்சிய கொடுமைகளையும் பன்னாட்டு சமூகம் கண்டுகொள்ளாமல் இருப்பது மிகவும் வேதனை அளிக்கின்ற விசயம். அந்த வகையில் விளாடிமிர் புடினை விஞ்சிய ஸ்ரீலங்கா இனப்படுகொலையாளிகள்மீது உலகம் எப்போது நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதே ஈழத் தமிழரின் கேள்வி.

ரஷ்யாவிற்கும் உக்ரைனிற்கும் நடக்கும் போர் உலகில் பெரும் தாக்கம் செலுத்தி வருகிறது. பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பல மாற்றங்களும் விளைவுகளும் உருவாக ரஷ்யா உக்ரைன்மீது தொடுத்த போர் அடிப்படையாக இருக்கின்றது. பூகோளமய அரசியலும் வாழ்விலும் பொருளாதாரமும் தவிர்க்க முடியாத நிபந்தனையாகிவிட்ட உலகச் சூழலில் உக்ரைன்மீதான ரஷ்யாவின் போர், நாடுகளின் அரசியலை தளம்பச் செய்துள்ளதுடன், பொருளாதார ரீதியாகவும் பின் தள்ளியுள்ளது. உலகில் இன்று முக்கிய பேசுபொருளாகவும் இந்தப் போர் மாறியுள்ளது.

சோவியத் யூனியனின் வீழச்சிக்குப் பிறகு, முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு உக்ரைன் விடுதலை அடைந்தது. என்ற போதும் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு வகையான உறவுகளும் தொடர்புகளும் காணப்படுகின்றன. மேற்குலக ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்ட உக்ரைன் நோட்டோவுடன் இணைந்துகொள்ள எடுத்த தீர்மானத்தை அடுத்தே ரஷ்யாவிற்கும் உக்ரைனிற்கும் முரண்பாடு எழுந்தது. உக்ரைனின் அமெரிக்கச் சார்ப்பு ரஷ்யாவிற்கு சினமூட்டிய நிலையில், ரஷ்யா மிகக் கடுமையான போரை உக்ரைன்மீது தொடுக்கத் துவங்கியது.

2014ஆம் ஆண்டு முதல் இந்த மோதலுக்கான அடிப்படை உருவாகிய போதும் 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உக்ரைன்மீது ரஷ்யா போரை துவங்கியிருக்கிறது. நவீன முறையிலான போரின் ஊடாக ரஷ்யா தொடுத்த தாக்குதல்களால் உக்ரைன் நகரங்கள் சிதைந்து சிதலங்களாக காட்சி அளிக்கின்றன. உக்ரைனின் பல பகுதிகளை ரஷ்யா கைப்பற்றி இருக்கும் நிலையில், ரஷ்யா கைப்பற்றிய பல நகரங்களை உக்ரைன் மீண்டும் மீட்டிருப்பதும் நடந்திருக்கிறது. உலகில் எங்கும் எந்த அநீதிகளுக்கும் போர் தீர்வல்ல என்பதை இன்றைய உக்ரைன் நாட்டின் சிதைவுகளும் இந்த உலகிற்கு சொல்லியபடி இருக்கின்றன.

அதுவும் ஈழ நிலம் உலகிற்கு சொல்லிய அதே செய்திதான் இன்று உக்ரைன் மண்ணில் இருந்தும் வருகிறது. தம்மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாமீது திருப்பித்



தீபச்செல்வன்

தாக்குவது தவிர்க்க முடியாத நிலை என்று உக்ரைன் அதிபர் பேசினாலும் இந்தப் போரை ரஷ்யாவை நிறுத்தச் சொல்லுங்கள் என்பது உக்ரைன்அதிபரின்தொடர்கோரிக்கையாகும். இதுவரையில் ரஷ்யாவின் தாக்குதல்களால் 45 ஆயிரம் பேர் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அத்துடன் 15 ஆயிரம் பேர் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். சுமார் 14 மில்லியன் மக்கள் இந்தப் போரினால் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளார்கள்.

இந்த நிலையில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடிவிராந்து பிறப்பித்துள்ளது. உக்ரைன் மீதான போரில் போர்க்குற்றங்களை இழைத்தமைக்காக இந்த கைதுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. உக்ரைன் குழந்தைகளை கடத்தியதாக விளாடிமிர் புடின்மீது முக்கிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. குழந்தைகளை சட்டவிரோதமாக நாடுகடத்துவதற்கான போர்க் குற்றத்திற்கும், உக்ரைனின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து ரஷ்ய




கூட்டமைப்பிற்கு மக்கள் தொகையை (குழந்தைகளை) சட்டவிரோதமாக மாற்றியமை உள்ளிட்ட குற்றங்கள் இனவொதுக்கல் மற்றும் அது சார் படுகொலைக் குற்றங்களாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் ரஷ்ய கூட்டமைப்பின் தலைவர் அலுவலகத்தில் குழந்தைகள் உரிமைகளுக்கான ஆணையர் மரியா அலெக்ஸீவ்னா லவோவா-பெலோவாவை கைது செய்யவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உலகில் எங்கு அநீதிகள் நடந்தாலும் அதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. போர் இரக்கமற்றது. அது மக்களையும மண்ணையும் தலைமுறைகளுடன் தின்று ஏப்பமிடுவது. முப்பது ஆண்டுகளாக ஶ்ரீலங்கா அரசின் இனப்படுகொலைப் போரை எதிர்கொண்ட ஈழத் தமிழர்கள் போரின் கொடுமையையும் அதன் முகங்களையும் நன்கு அறிவார்கள். உக்ரைன் மண் எதிர்கொண்ட போரை விடவும் ஈழம் எதிர்கொண்ட போர் மிகவும் கடுமையானது.

உக்ரைனும் ரஷ்யாவின் இன்னும் பல நாடுகளும் ஶ்ரீலங்கா அரசுக்கு பல ஆயுத, அரசியல் உதவிகளை வழங்கிய நிலையில்தான் ஸ்ரீலங்கா அரசு ஈழ மண்ணை பந்தாடியது.

எனவே விளாடிமிர் புடின்மீது சர்சதேச சமூகம் இவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுப்பது மிகச் சிறந்த விடயம். 2022இல் தொடங்கிய போரில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்காக ஓராண்டிற்குள்ளேயே நடவடிக்கை எடுத்திருப்பது சிறந்த முன்னெடுப்பு. ஆனால் முப்பது ஆண்டுகளாக ஈழத் தமிழர்களை போரின் மூலம் இனப்படுகொலை செய்து வரும் ஶ்ரீலங்கா அரசுமீது இன்னமும் நடவடிக்கை எடுக்காமல் இலங்கையில் மனித உரிமை மீறல்களும் போர்க்குற்றங்களும் நடந்திருக்கின்றன என்ற அடிப்படையில் குறுகிய பார்வையையும் குறுகிய அவதானத்தையும் செலுத்தும் பன்னாட்டு சமூகத்தின் பாரபட்சமான அணுகுமுறைதான் இனப்படுகொலைப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் துயரைத் தருகின்றது.

விளாடிமிர் புடின் உக்ரைன் குழந்தைகளை கடத்தினார் என்ற முக்கிய குற்றச்சாட்டு போர்க்குற்றத்தில் பேசு பொருளாக இருக்கிறது. ஶ்ரீலங்கா அரசு ஈழத்தில் குழந்தைகளையும் சிறுவர்களையும் மையப்படுத்தி பல படுகொலைகளை அரங்கேற்றியது. நாகர்கோவில் பாடசாலை மாணவிகள் படுகொலை, செஞ்சோலை மாணவிகள் படுகொலை என்பன மிகப் பெரிய படுகொலைகள் ஆகும். முள்ளிவாய்க்காலில் எத்தனையோ குழந்தைகள் கொன்று வீசப்பட்டார்கள். தாயின் கருவறையில் இருந்த குழந்தைகளைக் கூட ஸ்ரீலங்கா அரச படைகள் வயிற்றை கிழித்து கொன்று வீசின.

சரணடைந்த குழந்தைகள் வன்புணரப்பட்டார்கள். சரணடைந்த குழந்தைகள் கொல்லப்பட்டார்கள். நிராயுதமாக சரணடைந்த பாலச்சந்திரனை ஸ்ரீலங்கா அரசு இரக்கமற்ற வகையில் மனித குலத்திற்கு எதிரான முறையில் மிகக் கொடுமையாக கொன்றது. போரில் சரணடைந்த 50இற்கும் மேற்பட்ட குழந்தைகள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். ஶ்ரீலங்கா அரசின் அதிகாரபூர்வ அறிவிப்புக்கு அமைய பன்னாட்டு சமூகம் பார்த்திருக்க கையளிக்கபட்பட்ட ஐம்பது குழந்தைகளுக்கு என்ன நடந்தது? அவர்களை ஶ்ரீலங்கா அரசு என்ன செய்தது என்பது குறித்து இன்றளவுக்கும் பன்னாட்டு சமூகம் நடவடிக்கை எடுக்கவில்லையே?

விளாடிமிர் புடினை விஞ்சிய ஶ்ரீலங்கா இனப்படுகொலையாளிகள் இழைத்த போர்க்குற்றங்களை இன்னமும் சொல்லிக் கொண்டே போகலாம். உண்மையில் நீதி என்பது உக்ரைன் மக்களுக்கு ஒரு மாதிரியும் ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு மாதிரியும் இருக்கக்கூடாது. அதனைப் போல தண்டனை என்பதும் விளாடிமிர் புடினுக்கு ஒரு மாதிரி, ஶ்ரீலங்கா ஆட்சியாளர்களுக்கு ஒரு மாதிரியும் இருக்கக்கூடாது. அன்று ஈழத்தில் இனப்படுகொலைக்கு நீதியை வழங்கியிருந்தால் இன்று உக்ரைனில் இந்த அநீதி தொடராது. ஈழ இனப்படுகொலைக்கான நீதி என்பது ஈழத் தமிழர்களின் விடுதலைக்கு மாத்திரமின்றி உலக மக்களுக்கும் நீதியையும் பாதுகாப்பையும் விடுதலையையும் தரக்கூடியது.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com

குரல் 03 மலர் 33 மார்ச் 2023 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com

## சாத்தியமாகுமா தமிழ் பேசும் ஐக்கிய முன்னணி?

வரலாறு நெடுகிலும், தமிழ், முஸ்லிம், மலையக இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளிடையே பல்வேறு ஐக்கியங்களையும், கூட்டுக்களையும் கண்டிருக்கின்றோம்.

ஆனால் அவை எத்தனை காலம் நீடித்திருந்தன என்பதை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவை சிதைவடைந்தமைக்கான காரணங்கள் என்வென்று பார்க்கையில் அனைத்துமே வெறும் அற்ப காரணங்களுக்காகவே நிகழ்ந்தும் இருக்கின்றன. இதற்கு பல்வேறு முன்னுதாரணங்களை கூற முடியும்.

வரலாற்றை மீள ஆராய்வதிலிருந்து, அவ்விதமான நிலைமைகள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது கவனமாக இருப்பதற்கு வழிசமைப்பதாக இருக்கும்.

அவ்வாறிருக்கை, தற்பொழுது தமிழ் பேசும் கட்சிகளிடையே ஐக்கிய முன்னணியொன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. இந்தச் செயற்பாட்டில் தீவிரமாக இறங்கி யிருப்பவர் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தான்.

இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு மிகப்பொருத்தமான ஒருவர் மனோகணேசன் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஏனென்றால் அவர் தமிழ், முஸ்லிம், மலையக கட்சிகளுடன் ஊடாடும் திறமையைக் கொண்டிருக்கின்றார். அத்துடன் அவருக்கு பகையாளிகள் என்று யாரும் பெரிதாக இல்லை.

அந்தவகையில் அவர் மூன்று முக்கிய விடயங்களை மையப்படுத்தி இந்த ஐக்கிய முன்னணியின் அவரச தேவையை வெளிப்படுத்தி யிருக்கின்றார். அதில் முதலாவது, தமிழ் பேசும் மக்களின் அபிலாஷை களை தென்னிலங்கை மக்களுக்கு வெளிப்படுத்துதல் இதன்மூலம் தென்னிலங்கை தேசிய சக்திகளின் திரித்துக்கூறும் வாக்குவங்கி பிரசாரத்தினை தடுக்கலாம் என்பது அவரது திட்டம்,

அடுத்தது தேர்தல்களில் தமிழ் பேசும் தரப்பினரிடையே ஒரு கூட்டை அல்லது இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதன் ஊடாக, அதிகரத்தையும், பேரம்பேசும் சக்தியையும் வைத்துக்கொள்ள முடியும் என்பது அடுத்த திட்டம்.

மூன்றாவது, 13ஆவது திருத்தச்சட்டத்தின முழுமையாக நடை முறைப்படுத்தலுக்கான வலியுறுத்தலைச் செய்வதும், அதனை அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ளவதில்லை என்பமாகும். இதன்மூலம் அரசியல் தீர்வுக்கான புதியதொரு வியூகத்தை வகுக்க முடியும் என்பது மற்றொரு திட்டம்

இவற்றை அடிப்படையாக வைத்து அவர் தமிழரசுக்கட்சி, ரெலோ, புளொட், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய தரப்புக்களுடன் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார். விக்கினேஸ்வரன், ரிஷாத் தரப்புக்களுடன் பேச்சுக்களை முன்னெ டுக்கவுள்ளார். அதேநேரம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அதாவுல்லா, டக்ளஸ், பிள்ளையான் போன்றவர்களுடன் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுமா என்பது தொடர்பில் தெளிவான முடிவுகள் காணப்படவில்லை.

எதுஎவ்வாறாயினும், தமிழ் பேசும் தரப்புக்கள் அணியாக திரள்வது சிறந்தவொரு விடயம் தான். அந்த அணி ஒட்டுமொத்த பாராளுமன்றத்தையும் பிரதிநிதித்துவம் செய்வதாக இருக்குமா இல்லை எதிரணியை மட்டும் மையப்படுத்தியதாக இருக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியுள்ளது.

ஆனால், தமிழ் பேசும் அணி தென்னிலங்கைக்கு புரிதலை ஏற்படுத்தல், தேர்தலில் இணைந்து பணியாற்றல் என்பவற்றுக்கு அப்பால் 13ஆவது திருத்தம், தேசிய பிரச்சினைக்கான தீர்வு ஆகிய விடயங்கள் பற்றி உரையாடும்போது எவ்வளவு தூரம் இணக்கப்பாடுகள் எட்டப்படும் என்பது தான் மிகப்பெரும் கேள்வியாகவுள்ளது.

ஏனென்றால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வடக்கு,கிழக்கு இணைந்தது தமிழர் தாயகம் என்பது மரபுரீதியான கோட்பாடு. இந்த விடயத்தில் விட்டுக்கொடுப்புக்களுக்கு இடமில்லை. இதில் முஸ்லிம் தரப்புக்கள் நிச்சயமாக இணங்கி இறங்கி வரும் என்று கூறுவதற்கு இல்லை.

அதுமட்டுமன்றி, 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப் படுத்துவதை வலியுறுத்துவதாக இருந்தால் நிச்சயமாக தமிழ்த் தேச-ிய மக்கள் முன்னணி பங்கேற்காது. இந்த விடயத்தினை மனோ கணேசனுக்கு, கஜேந்திரகுமார் வெளிப்படுத்தியும் விட்டார்.

ஆக, தமிழ் பேசும் ஐக்கிய முன்னணியை ஸ்தாபித்தல் என்பது ஆரம்பத்திலேயே சாத்தியமாகுமா என்ற ஐயப்பாடுகளுடனேயே காணப்படுகின்றது. ஆகவே மனோவின் முயற்சிகள் வெற்றிபெற்றால் வாழ்த்துக்கள். தோல்வி அடைந்தால் நன்று முன்னேற இடமுன்று என்பது தான் அடைவு மட்டமாக இருக்கும்.

## சீன-ரஷ்ய-அரபுலக உறவில்
# இந்தியாவின் நிலை என்ன?

**இதயச்சந்திரன்**

*சிரிய அதிபர் பசீர் அல் அசாத் ஐக்கிய அரபுக் குடியரசிற்கு (அபுதாபி) போகிறார். அரபுலகத்தில் சிரியா மீண்டும் இணைய வேண்டுமென்கிற சகோதரத்துவ வேண்டுகோளினை விடுக்கிறது* I.m.F.

*அதுமட்டுமா.....ஈரான் அதிபர் சவூதி அரேபியாவிற்குப் பயணமாகிறார்.*

*ஓமான் சுல்தான் விரைவில் ஈரான் செல்கிறார்.*

*யேமனில் மோதிக்கொள்ளும் குழுக்கள் கைதிகளை பரிமாறிக் கொள்கின்றன.*

*ஓமான் வளைகுடாவில் சீனா, ரஷ்யா, ஈரான் இணைந்து படைத்துறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றன.*

*இந்த திடீர் அரவணைப்புகளுக்கும், கைகுலுக்களுக்கும் என்ன காரணம்?.*

*இந்த மாற்றங்களின் பின்னணியில் சீனாவும், ரஷ்யாவும் செயற்படுகிறதா?.*

Petrodollar *ஆதிக்கம் இனி ஆட்டங்காணுமா?.*

*ரஷ்யா மீதான மேற்குலகின் நிதி முடக்கம்* (sanction), *எரிசக்தி ஏற்றுமதியில் மட்டும் தங்கியிருக்கும் அரபுநாடுகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதா?.*

*உலகின் எரிசக்தி இறக்குமதியில் முதன்மை நாடாகக் கருதப்படும் சீனாவைப் பகைத்துக்கொள்ள இவர்கள் விரும்பவில்லையா?. இப்படிப் பல கேள்விகள் எழுகின்றன.*

*சீனாவின் எரிசக்தி பாதுகாப்பிற்கு* (Energy security), *மத்திய கிழக்கு நாடுகளோடு ரஷ்யாவும் இணைந்து கொண்டது இந்த மாற்றத்திற்கான பிறிதொரு காரணியாகக் கொள்ளலாமா?.*

*ஐந்து நாடுகளின் பொருண்மியக் கூட்ட மைப்பான* BRICS *உடன் இணைவதற்கான முன் னோட்டமாக, இந்த 'சடுதியான' பக்கத்துவீட்டுப் பயணங்களைப் பார்க்கமுடியுமா?.*

*இவர்கள் கைகுலுக்கும் காரணங்களை அமெரிக்கா புரிந்தாலும், திரண்டுவரும் புதிய அணிகள் தற்காலிகமானதா? அல்லது உறுதியான தாக இருக்குமா? என்பதற்கப்பால், இத்தளத்தில் இந்தியா எந்தவகையில் தன்னை இணைத்துக் கொள்ளப்போகிறது என்பது குறித்தே அதிக அக்கறையோடு அமெரிக்கா கவனிக்கும்.*

*இந்தியாவானது 'பிரிக்ஸ்' கூட்டமைப்பில் இருந்தாலும், சீனா, ரஷ்யா மற்றும் அரபுல-கம் என்ற கூட்டு உருவாக்க முனையும் பொது நாணயத்தையோ அல்லது பொருளாதாரக் கட்டமைப்பையோ அல்லது ஏழுளுவுசுமு (இந்தியாவின்)போன்ற புதிய இருதரப்பு* Payment Settlement *முறைமையையோ இந்தியா ஏற்றுக்கொள்ள வாய்ப்புள்ளதா?.*

*ஆனாலும் நடைபெறும் ரஷ்ய- உக்ரேயின் போரும், பெரிய வங்கிகளின் தொடர் வீழ்ச்சியும், குறிப்பாக சுவிஸ்* Credit Sussie *இன் கூ17 பில்லியன் கடன்பத்திர சிக்கலும் இணைந்து, உலக பொருளா-தார நிதிக் கட்டமைப்பில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகிறது.*

*இவையாவும் சேர்ந்து, இருதுருவ பூகோள அரசியல் வடிவத்தை மீண்டும் உறுதிப்படுத்தும்.*

*இதில் இந்தியாவின் நிலைப்பாடு சிக்கல் மிகுந்ததாக இருக்கும்.*

G20 *கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பினை ஏற்ற இந்தியா, எதிர்வரும் நாட்களில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிவரும்.*

## மறைந்த காட்டுனிஸ்ட் அஸ்வினின்
### தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து...



# சிறிலங்கா ஜனநாயகத்தின் மூன்றாம் தர இழிநிலை



-தேசிகன்-

சிறிலங்காவின் ஜனநாயகம் பற்றிய உரையாடல் செய்வது பொருத்தமானதா இல்லையா என்ற வாதப்பிரதிவாதங்களுக்குரியது என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

1978ஆம் ஆண்டு ஜேர்.ஆர்.ஜயவர்த்தன இரண்டாவது குடியரசு யாப்பினை உருவாக்கினார். இதில் தமிழ் மக்களின் விருப்பு வெறுப்புக்கள் உள்ளீர்க்கப்படவில்லை என்பது வேறுகதை.

ஆனால், குறித்த யாப்பில், அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஆழமாக வலுப்படுத்தினார். ஜனநாயக கட்டமைப்பில் சம அந்தஸ்துடன் இருக்கின்ற சட்டவாக்கத்துறையான பாராளுமன்றம், நீதித்துறை மற்றும் நான்காவது தூணான ஊடகங்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்தக் கூடியளவுக்கு 'சிறப்பு உரிமைகள்' பல நிறைந்ததாக அந்த வலுப்படுத்தல் அமைந்திருந்தது.

'ஆணை பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மட்டுமே தன்னால் மாற்ற முடியாது' என்று நிறைவேற்று அதிகார அரசியலமைப்பை நிறைவேற்றியதன் பின்னர் ஜே.ஆர். பகிரங்கமாகவே தனது 'மைய அதிகாரக் குவிப்பு' பற்றி புன்னகையுடன் கூறியுள்ளார் என்பது வரலாறு.

தற்போது ஜனாதிபதி அரசியாசனத்தில் இருப்பவர் அவரது அரசியல் வாரிசான ரணில் விக்கிரமசிங்க. கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒதுக்க வாக்குகளின் அடிப்படையிலான தேசியப் பட்டில் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஒன்றரை வருடங்கள் தாமதித்து ஏற்றுக்கொண்டவர்.

அதன் பின்னர் ராஜபக்ஷக்களுக்கு எதிரான 'அரகலய' ஏற்படவும் அதனைப் பயன்படுத்தி ஜனாதிபதி அரியாசனத்தைப் பெற்றுக்கொண்டு விட்டார். மக்கள் ஆணையற்றவர் என்ற விமர்சனங்கள் காணப்பட்டாலும், அவர் அரசியலமைப்பை மீறவில்லை என்பது அவரது தரப்பினரதும், சர்வதேசத்தினதும் வாதம்.

அதுவொருபுறமிருக்க, எந்தவொரு விடயத்தினை எடுத்தாலும் அரசியலமைப்பை அடியொற்றி வாதங்களை முன்வைத்து எதிரிகளை அடக்கி வாசிக்கச் செய்வதில் வல்லவர் ரணில் விக்கிரமசிங்க.

அவ்விதமானவர், அரசியமைப்பில் 21ஆவது திருத்தச்சட்டம் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் ஏற்கனவே சுயாதீன ஆணைக்குழுக்களைக் கொண்டதாக வரையப்பட்ட 19ஆவது திருத்தச்சட்டத்திற்கு அது நிகரானது என்று பிரஸ்தாபித்தார்.

ஆனால் தற்போதைய சூழலில் 21ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரும் இன்னமும் நிறைவேற்று அதிகாரம் காணப்படுகின்றது என்பதை அவரே உறுதிப்படுத்தியிருக்கின்றார். அதேநேரம், அரசியலமைப்பை கடந்தும் நிறைவேற்று அதிகாரம் அகலக்கால் வைக்கும் என்பதையும் நிரூபித்து இருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் விருப்பு காணப்படவில்லை. தனது பதவியையும் மேலும் ஸ்திரப்படுத்திக் கொண்டு, கட்சியையும் இன்னும் வலுப்படுத்திக்கொண்டு தேர்தலொன்றுக்கு முகங்கொடுக்கலாம் என்பது தான் அவரது திட்டம்.

அதேநேரம், கீழ் மட்டத்திலிருந்து தேர்தலை நடத்த முனையாது, முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்திவிட்டு பின்னர் ஏனைய தேர்தல்களை நோக்கி நகரலாம் என்பதும் அவரது திட்டம்.

இதனால், தான் அவர் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு தொடர்ச்சியாக 'செக்' வைத்து வருகின்றார். அதுமட்டுமன்றி தேர்தலை நடத்துவதா இல்லையா என்பதையும் தீர்மானிக்கும் சக்தியாகவும் அவரே உள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான நீடிக்கப்பட்ட ஆயுட்காலம் 19ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது. இந்த நிலையில் மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டது. ஆரம்ப நடவடிக்கைகளையும் முன்னெடுத்தது. ஆனால் திறைசேரி உரிய பணத்தினை வழங்கவில்லை.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்குரிய நிதியை வழங்குவதற்கு போதிய நிதி இல்லை என்றார். அத்துடன் தேர்தல்கள் ஆணைக்கழு உள்ளூராட்சி மன்றங்களுக்கான உரிய அறிவிப்புக்களை முறையாக முன்னெடுக்கவில்லை என்றார்.

இதனால், தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூடி ஏப்ரல் 25இல் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்து வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிட்டது. அத்துடன் தேர்தலுக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக திறைசேரியின் செயலாளர், அரச அச்ச திணைக்களத்தின் தலைவர், காவல்துறை மா அதிபர் ஆகியோரையும் கலந்துரையாடலுக்கு அழைத்தது.

ஆனால், திறைசேரியின் செயலாளர் தேசியப் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் குறித்த நேரத்தில் இருந்தமையால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்திற்கு சமூகமளித்திருக்கவில்லை. தொடர்ந்து தேர்தல்கள் ஆணைக்குழுவும், அரச அச்சகத் திணைக்களமும் நிதியை விடுவிக்குமாறு திறைசேரியின் செயலாளருக்கு எழுத்து மூலமாக கோரிக்கைகளை தொடர்ச்சியாக அனுப்பி வருகின்றன.

ஆனால், திறைசேரியின் செயலாளரோ அந்த கோரிக்கைகளை தாம் நிதி அமைச்சராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைப்பதாக அறிவித்து வருகின்றார்.

நிதி அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேர்தலை நடத்துவதற்கு விருப்பமில்லை. ஆக, அவர் எவ்வாறு நிதியை விடுவிக்குமாறு அனுப்பி வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு சதகமான பதில்களை வழங்குவார். அதேநேரம், அவர் விரும்பினால் நிதியை விடுவிக்கலாம். இல்லாது விட்டால் அக்கோரிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பித்து நாடு நெருக்கடி நிலையில் உள்ளது ஆகவே நிதியை விடுவிக்க முடியாது என்றொரு அமைச்சரவைத் தீர்மானத்தினை இறுதி ஆயுதமாக எடுக்கலாம்.

அப்படிப்பார்க்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைத்தால் தான் உள்ளூராட்சித் தேர்தல் நடக்கும். இல்லையேல் அது நடைபெறாது என்பது தெளிவாகின்றது. ஜனநாயக கோட்பாட்டில் மக்களிடத்தில் தான் இறைமை உள்ளது என்பதுவும் அது தேர்தல் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது என்பதும் நிறுவப்பட்ட விடயம்.

ஆனால், இங்கு மக்களின் இறைமையை தேர்தலின் மூலம் உறுதிப்படுத்துவதா இல்லையா என்பதை தீர்மானிக்கும் சக்தி ஜனாதிபதி ரணிலிடம் உள்ளது. அப்படிப் பார்க்கையில் நிறைவேற்று அதிகாரத்திடம் தான் தற்போது மக்களின் இறைமைய தீர்மானிக்கும் அதிகாரம் காணப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தில் சட்டவாக்கம், நீதித்துறை நான்காவது தூணாக இருக்கும் ஊடகங்கள், சிவில் அமைப்புக்கள் என்று அனைத்து கட்டமைப்புக்களின் அழுத்தங்களையும் கடந்து செயற்பட்டு வருகின்றார்.

அதுமட்டுமன்றி, 'நரித் தந்திரத்தின் ஒட்டுமொத்த வடிவமாக' இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்டவாக்கத்துறையையும், நீதித்துறையையும் மோதவிடுமளவிற்கு கனகச்சிதமாக காய்களை நகர்த்திவிட்டு, அமைதியாக இருக்கின்றார்.

உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் திறைசேரியின் நிதியை முடக்கி வைப்பதை இடைநிறுத்தி உத்தரவொன்று திறைசேரியின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை மையப்படுத்தி பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும் அந்த உத்தரவு பின்பற்றப்படவில்லை.

மாறாக, உயர் நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவானது, சிறப்புரிமைகளை மீறவதாக உள்ளதென பொதுஜனபெரமுனவின் உறுப்பினர்களான சட்டத்தரணி தொலவத்த மற்றும் இராஜாங்க அமைச்சர் ஷிஹான் சேமசிங்க ஆகியோர் நாடாளுமன்றத்தில் கேள்விகளைத் தொடுத்துள்ளனர்.

இதனால், குறித்த விடயத்தினை நாடாளுமன்ற சிறப்புரிமைக்குழுவிற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அனுப்பி வைத்துள்ளார். நாடாளுமன்ற சிறப்புரிமைக்குழுவிற்கு தலைவராக இருப்பவர் சமல் ராஜபக்ஷ. அவர் இந்த விடயத்தினை விசாரணைக்கு உட்படுத்த முனைவாராகஇருந்தால்குறித்தஇடைக்கால உத்தரவு வழங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகளையும் நாடாளுமன்றக் குழுவிற்கு அழைக்க வேண்டி ஏற்படும்.

அவ்விதமான நிலைமையொன்று ஏற்பட்டால் சட்டவாக்கத்துறை நீதித்துறையைக் கட்டுப்படுத்துகின்றதா என்ற கேள்விகள் வலுக்கும். நீதித்துறையின் அபிமானம் குறித்து கேள்விகள் வலுக்கும். இந்த நிலைமையானது நாட்டில் ஸ்திரமற்ற சூழலை இலகுவாக ஏற்படுத்தும்.

அவ்வாறான நிலைமைகள் ஏற்படுகின்ற போது, மிக இலாவகமாக நிறைவேற்றுத் துறை ஒட்டுமொத்தமான அதிகாரத்தினையும் தனது கட்டுப்பாட்டுக்குள் எடுக்கும். நாட்டில் அமைதி, ஸ்திர நிலைமைக்காக அதிகாரத்தின் அதியுச்ச எல்லை வரையில் அது செல்வதற்கு விளையும் இது தான் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டம்.

2018இல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமராக இருந்த தன்னை பதவியை விட்டு நீக்கினார் என்று உயர்நீதிமன்றை நாடியவர் தான் ரணில் விக்கிரமசிங்க. அன்று நிறைவேற்று அதிகாரம் சட்டவாக்கத்துறையின் தலைமையைக் கொண்டிருந்த பிரதமர் மீது கை வைத்து விட்டது என்பதற்காக நீதித் துறையை நாடியது.

ஆனால், தற்போது நிறைவேற்றுத் துறையினின் விருப்பமில்லாத விடயத்தினை நீதித்துறை வலியுத்துகின்றது என்பதற்காக அதனை சட்டவாக்கத்துறையின் கூட்டில் நிற்பதற்கு வழி சமைத்திருக்கின்றது. இது தான் சிறிலங்கா ஜனநாயகத் தூண்களின் வேடிக்கையான செயற்பாடாகின்றது.

இந்த வேடிக்கைகளால் சிறிலங்காவில் ஜனநாயகம் மூன்றாம் தர இழி நிலைக்குள் சென்றுவிட்டது அம்பலமாகின்றது. சிறிலங்காவுக்கும் ஜனநாயகத்துக்கும் எள்ளளவும் தொடர்பில்லை என்பதே வெளிப்பட்டு நிற்கின்றது.

# ஐ.நா வின் அனைத்து பொறிமுறைகளிலும் செயலாற்றினால் தான் நீதியை பெறமுடியும்

## மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் உலகத் தமிழர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான பொஸ்கோ

**நீதிக்கும் உரிமைக்காகவும் போராடும் இனங்கள் செயற்பட வேண்டிய தளங்களின் தொடக்கப் புள்ளியாக காணப்படும் மனித ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தற்போது 52 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்றது. கடந்த பெப்ரவரி 27 இல் ஆரம்பமாகி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தொடரில் என்றுபோல் நீதிவேண்டிய தமிழர்களின் பிரசன்னமும் ஐ.நா. வின் சகல தளங்களையும் ஆக்கிரமித்துள்ளது.**

**இந்நிலையில் நடைபெற்று வரும் 52 ஆவது கூட்டத் தொடர் குறித்து பன்னாட்டு இராசதந்திர தளங்களில் தமிழர்களின் உரிமைகளுக்காக நீண்ட காலமாக தொடர்ச்சியாக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரும், உலகத் தமிழர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான பொஸ்கோ அவர்கள் நமது ஈழநாட்டிற்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்...**



**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த வருடம் நடைபெற்ற 51 ஆவது கூட்டத்தொடரில் சிறிலங்காவிற்கு மேலும் இருவருடகால அவகாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில்இ தற்போது நடைபெற்றுவரும் 52 ஆவது கூட்டத்தொடரில் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு எதிர்பார்த்து நிற்பது என்ன?**

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பாதிக்கப்பட்ட தரப்புக்கள் தமக்கான நீதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால் ஒவ்வொரு கூட்டத்தொடர் தொடங்குவதற்கு மூன்று கிழமைக்கு முன்னர் எழுத்துமூல அறிக்கைகளினை ஐ.நா வின் அங்கீகாரம் பெற்ற (ECOSOC) அமைப்புகளின் ஊடாக அனுப்பிவைக்க வேண்டும். அத்துடன் கூட்டத்தொடர் நடைபெறும் போது பிர-தான அவையில் வாய்மூல அறிக்கைகளினை பதிவு செய்வதுடன் பக்க அறை நிகழ்வுகளை செய்வதனூடாக எமது பிரச்சினையை அங்கு பேசுபொருளாக்க வேண்டும். மேலும் ஐ.நா. வின் நிபுணர்கள் மற்றும் சிறப்பு அறிகையாளர்கள் ஆகியோருடன் தனிப்பட்ட சந்திப்புக்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு எமது பிரச்சினைகளைத் தெளிவுபடுத்த வேண்டும்.

அதேபோன்று மனித உரிமைகள் ஆணையகத்தின் கீழ் 9 ஒப்பந்த ஆய்வுக்குழுக்கள் (Treaty Bodies) உள்ளன. இதில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (International Covenant on Civil and Political Rights - ICCPR), பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (International Covenant on Economic, Social and Cultural Rights - ICESCR) ஆகிய இரண்டு ஒப்பந்த ஆய்வுக்குழுக்கள் (treaty Bodies) மிகவும் முக்கியம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இந்த இரண்டின் கீழும் நாங்கள் எல்லா வழக்குகளையும் பதிவு செய்யலாம். உதாரணமாக இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் நடைபெறும் அனைத்து வன்முறைகளையும் நாம் இதில் பதிவு செய்யலாம்.

இவ்வாறு ஒவ்வொரு ஒப்பந்த ஆய்வுக்குழுக்களின் (Treaty Bodies) கீழும் நாங்கள் வழக்குகளைப் பதிவு செய்யலாம். ஆனால் நாங்கள் இதுவரை எந்தவொரு வழக்கையும் பதிவு செய்யவில்லை. இவ்வாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உள்ள வழிவகைகளையே தமிழர் தரப்பு சரியாகக் கையாளவில்லை. அல்லது பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

**ஜெனீவாவிலிருந்து நமது ஈழநாட்டிற்கு சிறப்பு செவ்வி**

ஆனால் நாங்கள் அவ்வாறு ஐ.நாவில் பல செயற்பாட்டுக் குழுக்கள் இருப்பதே தெரியாமல் எங்களுக்குள் மட்டும் விவாதித்துக் கொண்டிருக்கும் அதேவேளையில், உலகில் நடைபெறும் அனைத்து மாற்றங்களுக்கும் பூகோள அரசியல் மட்டுமே காரணம் எனும் வகையில் ஒரு கருத்து தமிழர்கள் மத்தியில் திணிக்கப்பட்டுள்ளது. நாங்கள் பூகோள அரசியலை மட்டும் பேசிக்கொண்டிருக்கும் வரை எங்களால் எந்தவொரு மாற்றத்தினையும் ஏற்படுத்த முடியாது.

இந்த கூட்டத்தொடரை இலக்காக் கொண்டு சிங்களத் தரப்பினர் பல மாதங்களுக்கு முன்னரே வேலை செய்யத் தொடங்கி விட்டார்கள்.

ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் ஆணையாளரின் வாய்மொழி மூலமான அறிக்கை முக்கியமானதாகும். இதற்குத் தேவையான தகவல்களை டிசம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்திருக்க வேண்டும். அத்துடன் இக் கூட்டத் தொடரை இலக்காகக் கொண்டு ஐ.நா வின் விசேட அறிக்கையாளர்களுக்கு தமிழர்களாகிய நாங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்க முடியும். விசேட அறிக்கையாளர்கள் கொடுக்கும் அறிக்கைகளின் பிரதிபலிப்பாகத்தான் ஆணையாளரின் அறிக்கை அமைந்திருக்கும். விசேட அறிக்கையாளர்களுக்கு எங்களுடைய அறிக்கைகள் மற்றும் தமிழருக்கு எதிராக நடக்கும் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் புதிய தகவல்களை நாம் தொடர்ந்தும் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு தொடர்ந்தும் நாங்கள் தகவல்களைக் கொடுத்துக் கொண்டிருந்தால் தான் ஜெனீவாவில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இவற்றை கருத்தில்கொண்டு மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட தரப்பினர், சமூக அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் என அனை-வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அனைத்து கூட்டத்தொடர்களிலும் தொடர்ச்சியாக கலந்துகொண்டு காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் ஊட-ாகவே இந்த கூட்டத்தொடர் மாத்திரமல்ல ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் எதையாவது எதிர்பார்க்கலாம்.

அதைவிடுத்து தனியே ஐ.நா வில் இலங்கை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் போது அல்லது விவாதிக்கப்படும் போது அதற்குரிய கால வரையறை முடிந்த பின்னர் அறிக்கைகள் அனுப்புகிறோம் என ஊடகச் செய்தியாக்குவது அல்லது முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் விமர்சகர்களாக ஊடகங்களில் கருத்துக்கள் சொல்லவதனால் எதனையும் சாதிக்க முடியாது. என்பதை விளங்கிக்கொண்டு சரியான வகையில் பொறிமுறைகளை உள்வாங்கி ஐ.நா.வின் அனைத்து பொறிமுறைகளிலும் காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுத்தால் மாத்திரமே எமக்கான நீதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த வேளையில் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 51வது கூட்டத்தொடரில் இலங்கை விடயம் தொடர்பில் பிரிவு 2 கீழ் 51/1 எனும் புதிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு சிறீலங்கா அரசிற்கு மீண்டும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது. அத்துடன் 46/1 தீர்மானத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சாட்சியங்கள் சேகரிப்பதற்கான குழுவிற்கான கூடுதல் பாதீடும் ( Budget ) ஒதுக்கப்பட்டது. இவற்றை சிறீலங்கா அரசு தனக்கு சாதகாமாக்கி சிங்கள சிவில் சமூக அமைப்புகள் ஊடாக தமிழர்களுக்கு எதிரான தரவுகளை அந்தக் குழுவிற்கு அதிகளவில் தொடர்ச்சியாக சமர்ப்பித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சூழலில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கூட்டத்தொடர்கள் போன்று இக்கூட்டத்தொடரும் தமிழர்களான எமக்கு மிகுந்த சவால் மிக்க ஒன்றாகவே இருக்க்கின்றது.

அந்தவகையில் நீதிக்கும், உரிமைக்காகவும் போராடும் இனங்கள் செயற்பட வேண்டிய தளங்களின் தொடக்கப் புள்ளியாக காணப்படும் மனித உரிமைகள் பேரவையில் முடிவுகள் எடுக்க முன்னர் செயற்பாடுகளை முன்னெடுக்காமல் முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் அறிக்கை விடுவது மற்றும் ஊடகங்களில் விவாதிப்பதாலும் எதனையும் மாற்ற முடியாது.

பரீட்சைக்கு படிக்காமலும் அதனை எழுதாமலும் பரீட்சை முடிவு வெளிவரும் நாளில் வந்து சிறந்த பெறுபேற்றை எதிர்பார்ப்பது போல எம்மவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

**ஐ.நா. கூட்டத்தொடரின் உயர்மட்ட அறிக்கைகள் வாசிப்பின்போது நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் அல்லது முக்கிய பிரதிநிதிகள் நேரில் சமூகமளித்து உரையாற்றுவார்கள். அந்தவகையில் இதில் இம்முறை சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கலந்துகொள்ளாமை குறித்து உங்களின் அவதானிப்பு யாது?**

(07ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா வின் அனைத்து பொறிமுறைகளிலும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறீலங்கா அரசனானது உலக நாடுகள் மத்தியிலும், அனைத்துலக பொறிமுறைகளுக்குள்ளும் தனது இராசந்திரத்தை ஒழுங்காக முன்னெடுத்து வருகின்றது. உதாரணமாக தமிழர்கள் மீது அனைத்துலக குற்றங்களை நிகழ்த்திவிட்டுஇ எவ்வித சர்வதேச பொறிமுறைகளுக்குள்ளும் சிக்காமல் கடந்த 5 வருடங்களாக புளீ10 வரிச்சலுகையைப் பெற்றுக் கொண்டமை மற்றும் கடந்த காலத்திலும் தற்போதும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டவற்றைக் குறிப்பிடலாம்.

அதேவேளையில் 2015 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் மேற்குலக நாடுகளினால் இலங்கை தொடர்பில் முன்மொழியப்பட்ட தீர்மானத்திற்கு இணை அனுசரனை வழங்கிய சமபொழுதில் அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பான பு 77 குழுவின் தலைமைப் பொறுப்பினையும் இரண்டு வருடங்கள் வகித்திருந்தது.

மேலும் இலங்கை சிறு தீவு நாடாக உள்ள போதிலும், வல்லாதிக்க நாடுகளுக்கு இணையாக அனைத்து பொறி முறைகளிலும் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

மேலும் ஐ.நாவின் 51/1 தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று வெளியில் கூறிக்கொண்டு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நிறுவனங் களிடம் தமக்கான பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக தாம் ஐ.நா பொறிமுறைகளுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக அந்நிறுவனங்கள் மத்தியில் தமது கபட நாடகங்களைத் தொடர்சியாக அரங்கேற்றி வருகின்றது.

அந்தவகையில் இந்த கூட்டத்தொடரில் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொள்ளும் உயர்மட்ட அறிக்கைகளின் போது சர்வதேச நாணய நிதியத்திடம் நற்பெயரைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும், சிங்கள மக்களின் எதிர்ப்பைத் தவிர்க்கும் வகையிலும் சிறீலங்கா அரசின் வெளிவிவகார அமைச்சர் இந்தமுறை கலந்து கொள்ளாமல் இருந்துவிட்டு, பொது அறிக்கை வாசிப்பின் போது சிறீலங்காவின் ஜெனீவாவிற்கான தூதுவர் ஊடாக ஐ.நா பொறிமுறை மீதான தமது எதிர்ப்பைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த எதிர்ப்பை வெளிவிவகார அமைச்சர் உயர்மட்ட அறிக்கை வாசிப்பில் கலந்துகொண்டு தெரிவித்திருந்தால் சர்வதேச நாணய நிதியத்தினால் சிறீலங்கா அரசிற்கு விதிக்கப்பட்ட நிபந்தனையை மீறியதாக அமைந்திருக்கும்.

மேலும் 51/1 தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப் போவ தில்லை எனக் கூறிக்கொண்டு 46/1 தீர்மானத்தின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட சாட்சியங்கள் சேகரிப்பதற்கான குழுவிற்கான கூடுதல் பாதீடும் (Budget) 51/1 தீர்மானத்தில் ஒதுக்கப்பட்டது. இவற்றை சிறீலங்கா அரசு தனக்கு சாதகமாக்கி சிங்கள சிவில் சமூக அமைப்புகள் ஊடாக தமிழர்களுக்கு எதிரான தரவுகளை அந்தக் குழுவிற்கு அதிகளவில் தொடர்ச்சியாக சமர்ப்பித்துக் கொண்டி ருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் கடந்த காலங்களில் எவ்வாறு அனைத் துலக நாடுகள் மத்தியில் நாடகமாடி தமக்கான பொருளா-தார ஆயுத உதவிகளைப் பெற்றுக் கொண்டார்களோ, அதே போன்றே தற்போதும் காய்களை நகர்த்தி வருகின்றது. இவற்றை உணர்ந்து கொண்டு கடந்த 2015 ஆம் ஆண்டு சிறீலங்கா அரசின் பொறிக்குள் சில தமிழர் தரப்புகள் சிக்கியது போன்று மீண்டுமொருமுறை சிக்காமல் விழிப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.

**ஐ.நா.வின் கால மீளாய்வுக் கூட்டத்தொடரில் சிறிலங்கா அரசுக்கு 106 நாடுகளினால் வழங்கப்பட்ட 294 பரிந்துரைகள் பற்றி கூறுங்கள்.**

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் முக்கிய பிரிவு-களில் ஒன்றான உலகளாவிய கால மீளாய்வு (Universal Periodic Review ) செயல்முறையின் கீழ் மனித உரிமை கள் பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் அனைத்து விதமான மனித உரிமை ஒப்பந்தங்களின் கீழும் 4 வருடத்திற்கு ஒருமுறை ஆய்வுக்கு உட்படுத்தப்படும். அவ்வகையில் சிறீலங்கா இந்த வருடம் பெப்ரவரி முதலாம் திகதி ஆய்விற்கு உள்ளாக்கப்பட்டது.

அதில் சிறீலங்கா அரசுக்கு 294 பரிந்துரைகள் 106 நாடுகளினால் வழங்கப்பட்டது. அந்த பரிந்துரைகள் தொடர்பிலான தமது நிலைப்பாட்டை சிறீலங்கா அரசு எதிர்வரும் மே 30 இற்கு முன்னர் தெரியப்படுத்து வார்கள். அது தொடர்பில் எதிர்வரும் யூன் மாதம் இடம்பெறும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 53 ஆவது கூட்டத்தொடரில் மனித உரிமைகள் பேரவை தனது இறுதி நிலைப்பாட்டைத் தெரிவிப்பார்கள்.

அந்தவகையில் சிறீலங்கா அரசு தாம் எந்தெந்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிறோம் என தெரிவித்த பின்னர் பாதிக்கப்பட்ட தரப்பாகிய தமிழர்கள் சிறீலங்கா அரசு ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளில் எவற்றை நிறைவேற்றவில்லை என்பது தொடர்பில் நாம் தொடர்ச்சியாக ஐ. நா வின் 9 ஒப்பந்த அமைப்புகள், 44 சிறப்பு அறிக்கையாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் நிபந்தனைகளை முன்மொழிந்த நாடுகள் ஆகியவற்றிற்கு அறிக்கைகளுடன் எமது தனிநாட்டு கோரிக்கையையும் தொடர்ச்சியாக அனுப்பி வைக்க வேண்டும்.

இதனூடாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையா-




ளர் வருடாந்த அறிக்கை தொடர்பான பொது விவாதம் ஆகிய பிரிவு 2 இன் கீழும், உலகளாவிய கால மீளாய்வு தொடர்பான பொது விவாதமான பிரிவு 6 இன் கீழும் எமது பிரச்சினையை விவாதப்பொருளாகத் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

இலங்கை தொடர்பான கால மீளாய்வுக்கான அறிக்கைகளை சிவில் சமூக அமைப்புகள் கடந்த வருடம் யூலை 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்திருக்க வேண்டும். ஆனால் பாதிக்கப்பட்ட தரப்பாக தமிழர் தரப்பில் இருந்து போதிய அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஐ.நா. தளத்தில் தொடர்ந்து செயலாற்றிக்கொண் டிருக்கும் உலகத் தமிழர் இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 52 ஆவது கூட்டத்தொடரில் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.**

உலகத் தமிழர் இயக்கமாக நாம் கடந்த 51வது கூட்டத்தொடர் முடிந்த உடனேயே இந்த கூட்டத் தொடருக்கான தயார்ப்படுத்தல்களில் ஈடுபட தொடங்கி விட்டோம். குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை யின் 23 சிறப்பு அறிக்கையாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் சந்திப்புகளை ஏற்படுத்தி அவர்களின் துறைசார்ந்த எமது பிரச்சினைகளை எடுத்துரைத்து அறிக்கைகளை சமர்ப்பித்திருந்ததுடன் தாயகத்தில் இருந்து பாதிக்கபட்ட தரப்புகள் மற்றும் செயற்பாட்டாளர் களையும் அவர்களுடன் பேசுவதற்கான வாய்ப்புகளை யும் ஏற்படுத்தியிருந்தோம்.

மேலும் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் உள்ள பாதிக்கப்பட்ட தரப்புகள், சிவில் சமூகங்கள்,அரசியல் கட்சிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்தி 52வது கூட்டத்தொடரில் தமிழர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளுக்கான அழைப்பினை விடுத்திருந்தோம். ஆனால் நாம் எதிர்பார்த்த வகையில் தனிப்பட்ட முறைப்பாடுகளோ எழுத்துமூல அறிக்கைகளோ குறிப்பிட்ட தரப்பினரிடம் இருந்து எமக்கு கிடைக்கவில்லை. இருந்த போதிலும் குறித்த கூட்டத்தொடரில் நேரில் கலந்துகொண்டு எம்மால் ஒருங்கிணைக்கப்படும் பக்கவறை நிகழ்வுகள் மற்றும் பிர-தான அவை நிகழ்வுகளில் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் இருந்து பல்வேறுபட்ட நபர்கள் கலந்து கொண்டுவருகின்றனர்.

மேலும் இக்கூட்டத்தொடரில் நாம் எதிர்நோக்கும் பொருளாதாரா நெருக்கடி காரணமாக எம்மால் தாயகம் மற்றும் தமிழ்நாட்டில் இருந்து பாதிக்கப்பட்ட தரபினர் மற்றும் செயற்பாட்டாளர்களை அழைக்க முடியவில்லைஇ அதேநேரம் தாயகத்தில் இருந்து வருகைதர இருந்த சில செயற்பாட்டாளர்களுக்கு நுள்நுழைவு அனுமதி ( விசா ) மறுக்கப்பட்டதன் காரணமாகவும் இக்கூட்டத்தொடரில் கலந்துகொள்ள முடியவில்லை.

அந்தவகையில் கூட்டத்தொடரின் தொடக்க நாளில் இருந்து உலகத் தமிழர் இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் ஐ.நா வின் அங்கீகாரம் பெற்ற எமது இணை அமைப்புகள் ஊடாக கலந்துகொண்டு தமிழர்களின் உரிமைக்காகவும், நீதிக்காகவும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வழமைபோல மார்ச் மாத கூட்டத்தொடரின் முதல் வாரத்தில் இடம்பெற்ற உயர்மட்ட அறிக்கைகள் (High level segment) வாசிப்பின் போது பல்வேறு நாடுக-ளின் வெளி விவகார அமைச்சர்கள்இ உயர்மட்ட அரசு அதிகாரிகள் நேரில் வருகைதந்து உரையாற்றியிருந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் அவர்களில் பலரை சந்தித்து ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைஇ தமிழின அழிப்பிற்கான நீதிப்பொறிமுறைகள் மற்றும் தற்போதும் ஈழத்தில் இடம்பெற்றுவரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு போன்ற விடயங்களை எடுத்துரைத்து, அவர்களுடைய நாடுகளின் ஆதரவினைக்கோரியிருந்தோம். அப்போது தமது நாடுகளுக்கு நேரில் வருகைதந்து மேலதிக விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுமாறு அவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர்.

மேலும் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் ஐ.நா விடம் நாங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளில் இலங்கை சார்ந்து மனித உரிமைகள் அவையின் 4 ஆவது புள்ளியான ‘முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய மனித உரிமை பிரச்சனைகள்’ என்கிற புள்ளியின் கீழ் ஒரு புதிய தீர்மானத்தைக் கோரிவருகின்றோம்.

அத்துடன் இலங்கைக்கான விசேட பிரதிநிதியை நியமிக்கும்படியும் வலியுறுத்தி வருகின்றோம். தற்போது பெலாருஸ், கம்போடியா, எரித்திரியா, ஈரான், மாலி, மியன்மார், பாலஸ்தீனம், சோமாலியா, மத்திய ஆபிரிக்கா, வடகொரியாஇ சிரியா போன்ற நாடுகளுக்கு இது சாத்தியப் பட்டுள்ளது. அங்கெல்லாம் நடக்காத அளவிற்கு எமது தமிழீழத்தில் கொடுமைகள் நடந்தது, தொடர்ந்தும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் எம்மை அனைத்துலகம் மீண்டும் உள்நாட்டுப் பொறிமுறைக்குள் தள்ளி எம்மைக் கொன்றவனிடம் நீதி கேட்க நிர்ப்பந்திக்கின்றது. அதனை சுட்டிக்காட்டும் முகமாகவே எமது செயற்பாடுகளும், கோரிக்கைகளும் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் அமைந்திருக்கும். அத்துடன் ஆக்கிர மிப்பிற்குள் இருக்கும் தேசமாக தமிழீழ தேசத்தை அங்கீ கரிக்க வேண்டும் எனவும் தொடர்ச்சியாக கோரி வரு கின்றோம்.



# தாயகத்தின் பரிதாபம்

-தர்மன்-

வங்குரோத்து அடைந்துள்ளதாக அறிவித்துள்ள சிறிலங்கா தற்போது சர்வதேச நாணயநிதியத்தின் 2.9பில்லின் டொலர்களை கடனாகப் பெறுவதற்குரிய அடைவுமட்டத்தினைப் பெற்றுள்ளது.

இந்நிலையில்சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 330 மில்லியன் டொலர்கள் விரிவான கடன் இம்மாதம் சிறிலங்காவிற்கு கிடைத்துள்ளது. எஞ்சிய தொகை அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தொகை நெருக்கடியில் உள்ள சிறிலங்காவுக்கு எந்தத் தேவைக்காக பயன்படுத்துவது என்பதை கண்டறிந்து கொள்வதற்கே சவால்களை உருவாக்கிவிடும் நிலைமைகள் தான் உள்ளது.

ஆனாலும், இறக்குமதிகள் நிறுத்தப்பட்ட நிலையில், ஏற்றுமதிகள் அதிகரிக்கப்படாதபோதும், உள்நாட்டில் அனைத்து வரிகளையும் அதிகரித்து டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை அதிகரிக்கச் செய்திருக்கின்றது அரசாங்கம்.

இதனையொரு பாரியவெற்றியாக காண்பித்து வருகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஆனால் உள்நாட்டு உற்பத்திகள் அதிகரித்தனவா, ஏற்றுமதிகள் அதிகரித்தனவா என்ற கேள்விகளுக்கு அவரிடத்தில் பதில்கள் இல்லை.

மாறாக, தனிநபர் வருமானம் தொடர்பில் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டு, மாதமொன்றுக்கு மொத்த வருமானம் ஒரு இலட்சம் ரூபா அல்லது அதற்கு மேல் பெறுவோர் வரி செலுத்த வேண்டியிருக்கும் என்றும் உயர்ந்த தனிநபர் வருமான வரி 36 சதவீதமாக இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டு வர்த்தமானி அறித்தலும் விடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலைமையால், வரிச்சுமை தாங்காது தொழிற் சங்கங்கள் போராட்டங்களை தீவிரப்படுத்தி வருகின்றன. இதனால் சேவைத்துறையும் முடங்கும் நிலைமைகள் அடுத்துவரும் காலத்தில் ஏற்படும் அபாயகரமான சூழல் தோன்றியிருக்கின்றது.

இப்பின்னணியில் வெறுமனே 'காணல் நீர்' போன்ற விடயங்களை சுட்டிக்காட்டி பொருளாதாரத்தினை மீட்டுவிட்டதாக அல்லது மீட்கும் பாதையில் பயணிப்பதாக ஜனாதிபதி ரணில் காண்பிக்கும் படமானது, அவருடைய அடுத்த ஜனாதிபதி பதவிக்காலத்தினை அடியொற்றியது.

மாறாக, அவருடைய அறிவிப்புக்கள் மக்களை மையப்படுத்தியதாக இல்லை. அவ்வாறு எந்தவொரு ஆட்சியாளர்களுமே இருக்கப்போவதில்லை என்பது தான் சிறிலங்காவின் நிஜமான அரசியல் யதார்த்தமாகவுள்ளது.

இதுவொருபுறமிருக்கையில், நாட்டில் வாழும் 5.8 மில்லியன் குடும்பங்களில் 3.8 மில்லியன் குடும்பங்கள் அல்லது 60 வீதமானவர்கள் நிவாரணங்களை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அரசாங்கம் எவ்விதமான நிவாரணங்களை வழங்கப்போகின்றது என்பது தற்போது வரையில் அறிவிக்கப்படாத நிலைமையே உள்ளது.

இந்த எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதாக சில ஆய்வுத்தரவுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, 23 இலட்சம் சிறுவர்கள் உட்பட 57 இலட்சத்துக்கும் அதிக மான மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக யூனிசெப் நிறுவனம் கண்டறிந்துள்ளது. இதன் விளைவாக மந்தபோசாக்கினால் பாதிக்கப்படும் சிறுவர்களின் உயர்ந்த எண்ணிக்கையைக் கொண்ட உலகின் பத்து நாடுகளில் சிறிலங்காவும் ஒன்றாக விளங்குகிறது என்றும் யுனிசெப் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், நான்கு பேரைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு தினமும் குறைந்தது இரு வேளை உணவுக்கு மாதாந்தம் 40 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணம் தேவை. ஆனால், குறைந்தபட்ச மாதாந்த சம்பளம் 12,500 ரூபாவாகவே தொடருகிறது.

அதேவேளை, மத்திய வங்கி வருடாந்தம் வெளியிடுகின்ற தரவுகளின் பிரகாரம் குறைந்தபட்ச சம்பளம் 10,000 ரூபாவாகவே காணப்படுகிறது. அதேவேளை, முறை சாரா தொழில்களை செய்பவர்கள் குறிப்பாக அன்றாடம் கூலித்தொழில் செய்பவர்களின் நிலையை வேலை கிடைத்தால்தான் சாப்பாடு என்ற நிலையில் அவர்களின் வாழ்க்கை எவ்வாறிருக்கும் என்று சிந்திக்கத் தேவையில்லை.

ஒட்டுமொத்த நாட்டின் நிலைமை இவ்வாறிருக்கையில், தாயகத்தில் குறிப்பாக வடக்கில் அண்மையில் நெஞ்சுருக்கும் சம்பவமொன்று நிகழ்ந்திருக்கின்றது. யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, குடத்தனையைச் சேர்ந்த 53 நாளான குழந்தை ஒன்று மயக்கமுற்றதனால் உடனடியாக பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் மறுநாள் உயிரிழந்திருக்கின்றது.

உயிரிழந்த குழந்தையின் மரண விசாரணையை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரியான திருமதி.அன்ரலா வின்சன்தயான் குழந்தையின் உடலை உடல்கூராய்வு பரிசோதனை மேற்கொள்ள பரிந்துரைத்தார்.

இதற்கமைய குழந்தையின் உடலம் உணல்கூராய்விற்கு உட்படுத்தப்பட்டபோது குழந்தையின் மரணத்திற்கு போசாக்கின்மையே காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த சம்பவம் பரிதாபகரமானது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் 1814 கர்ப்பிணிகள் வறுமை நிலையில் உள்ளதாக யாழ். மாவட்ட செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 370 கர்ப்பிணிப் பெண்கள் வறுமை நிலையில் காணப்படுகின்றது.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் 226 கர்ப்பிணிப் பெண்களும், சங்கானைப் பிரதேச செயலகத்தில் 157 கர்ப்பிணிகளும், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் 139 கர்ப்பிணிகளும், யாழ்ப்பாணா பிரதேச செயலகப் பிரிவில் 138 கர்ப்பிணிகளும், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் 128 கர்ப்பிணிகளும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 118 கர்ப்பிணிகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் 117 கர்ப்பிணிகளும், மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் 98 கர்ப்பிணிகளும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 97 கர்ப்பிணிகளும், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 91 கர்ப்பிணிகளும், காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் 40 கர்ப்பிணிகளும், வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் 49 கர்ப்பிணிகளும், ஊர்காவற்துறை பிரதேச செயலகப் பிரிவில் 25 கர்ப்பிணிகளும், நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் 21 கர்ப்பிணிகளும், கண்டறியப்பட்டுள்ளனர்.

கர்ப்பிணகளுக்கு அரசாங்கத்தினால் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கடந்த 8 மாதங்களுக்கு மேலாக வழங்கப்படாமல் உள்ளமையும் இதன்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் நிலைமையே இவ்வாறு காணப்படுமாயின் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா உள்ளிட்ட ஏனைய தாயகத்தின் மாவட்டங்களின் நிலைமைகள் எவ்வாறு இருக்கும் என்பதை ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டுள்ளது.

அதுமட்டமன்றி, சிறுவர்களின் நிலைமைகளும் மோசமாகவே உள்ளது. குறிப்பாக, பல சிறுவர்கள் பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகும் தீர்மானத்திற்குச் சென்றுள்ளமையும் இங்கு குறிப்பிட வேண்டியதொரு விடயமாகவுள்ளது. ஆகவே தாயகத்தில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான நிலைமைகளை போக்குவதற்கு ஒரேயொரு வழியாக இருப்பது புலம்பெயர்ந்தவர்களின் ஆதரவுக் கரம் தான். ஏலவே பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்ற புலம்பெயர்ந்த உறவுகள் அடுத்து வரும் காலப்பகுதியில் முறையான ஒரு பொறிமுறை ஊடாக பகிரப்பட்ட அளவில் உதவிகள் பரந்து செல்வதற்கு வழிகளை கண்டறிய வேண்டும்.


இந்த விடயத்தில் தாயகத்திலும், புலம்பெயர் தேசத்திலும் உள்ளவர்கள் இணைந்து கூட்டு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது. அதற்குரிய வழிவரைபடம் தயாரிக்கப்பட்டு, வெளிப்படைத் தன்மையுடன் நிதிக்கையாளல் இடம்பெற்று சமமான தன்மையுடன் அனைத்து பகுதிகளும் ஆகக்குறைந்தது மூன்று வேளையாவது உணவை உட்கொள்வதற்கு வழிசமைக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் அரசியல், புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள் என்று பேதங்களைக் கடந்து தயாகத்தின் எதிர்காலத்தை மையப்படுத்தி இனம்சார்ந்து செயற்படும் சக்திகள் இனங்காணப்பட வேண்டும். அவை கூட்டுச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். அவ்விதமான செயற்பாடே விடுதலையை நோக்கும் சமூகத்தின் எதிர்காலத்தினை உறுதிப்படுத்துவாதாக இருக்கும்.

# தமிழர் தேச ஆக்கிரமிப்பில் ஆயிரம் கோத்தபாயாக செயற்படும் ரணில்

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் தெரிவிப்பு



தமிழர்களின் தேசத்தை ஆக்கிரமித்து சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பை திணிப்பதில் ஆயிரம் கோத்தபாய ராஜ பக்சவாக ரணில் செயற்படுகிறார். இதனை இன்னமும் உலகம் கைகட்டி வேடிக்கை பார்ப்பதுதான் வேதனை அளிக்கிறது என நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் சுட்டிக்காட்டுகின்றது. தமிழர் தேசத்தில் ஸ்ரீலங்கா அரசு மிகவும் பரவலான வகையில் ஆக்கிரமிப்பை முடுக்கி விட்டுள்ளமையை உலகம் உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

### குருந்தூர் மலை பறிபோனது

“தமிழ் ஈழ மண்ணில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்தது குருந்தூர்மலை. பழமையான ஆதிசிவன் ஆலயம் அமைந்திருந்த குருந்தூர் மலை சிவன் ஆலய தொன்மை ஆதாரங்கள் கடந்த சில வருடங்களின் முன்னர் ஆய்வின் போது மீட்கப்பட்டது. அங்கு காணப்பட்ட எண்முகலிங்கம் தமிழ்நாட்டின் எண்முக லிங்கத்துடன் தொடர்பானது. ஆனால் சிங்கள பௌத்த பேரினவாத பிக்குகளோ குருந்தூர் மலையை ஆக்கிரமிக்க பௌத்த சிங்கள கதையை திணித்துள்ளது.

அந்த வகையில் தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடத்திற்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என்றும் நிர்மாணிக்கப்பட்டவைகள் அகற்றப்பட வேண்டும் என்றும் முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்த போதும் சிங்கள படைகளின் காவலுடன் சிங்கள காவல்துறையின் துணையுடன் பௌத்த சிங்கள விகாரை அமைக்கும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இது சிங்கள தேசம் நீதிமன்றத்திற்கு கொடுக்கும் இடத்தையும் ஸ்ரீலங்கா நீதித்துறையில் தமிழருக்கான இடத்தையும் காட்டுகின்றது.

### கன்னியாயிலும் தொல்லியல் ஆக்கிரமிப்பு

ஈழத்தின் கிழக்கே திருகோணமலையில் உள்ள கன்னியா வெந்நீரூற்று, சிவபக்தனான இராவணன், திருக்கோணேச்சரர் ஆலயத்தை அமைத்ததுடன் தனது தாய் இறந்த காலத்தில் அவரின் அந்திகக் கிரியைகளுக்காக கன்னியா வெந்நீரூற்று என்ற அதிசயக் கிணற்றை அமைத்தான் என்று புராண அதிகாச வரலாறு கூறுகின்றது. சைவ சமய கிரியைக-ளுடன் தொடர்புடைய குறித்த இடத்தில் தமிழ் பூர்வீக அடையாளமும் சிறப்பும் பெற்றுள்ளது. ஆனால் இங்கு தமிழ் மொழியை அகற்றி சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பெயர்பலகை எழுதும் ஆக்கிரமிப்பு முயற்சி முன்னர் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் குறித்த பிரதேசத்தை பௌத்த பிரதேசம் என்று எழுதியும் அதன் வரலாற்றை திரிக்க சிங்கள தேசம் முற்படுகின்றது. இப்போது குறித்த கிணற்றை பார்வையிட்டு குளியல் மேற்கொள்ள வரும் சுற்றுலாப் பிரயாணிகளிடம், அறிவிடும் பணத்தை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சி மேற்கொள்ளும் வகையில் பற்றுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதனால் தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு கண்டு தமிழர்கள் பெரும் ஆத்திரத்தில் உள்ளனர்.

### வெடியரசன் கோட்டையையும் விடவில்லையா?

இதேவேளை, தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை ‘துறவிமடம்’ என்னும் பெயரிலான தொல்லியல் ஒதுக்கிடமாக வெளிப்படுத்தி 2020.11.26ஆம் திகதிய, 2203ஃ34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்டுள்ளது. இதன் ஊடாக பௌத்த சிங்களப் பேரினவாதம், அடுத்து வெடியரசன் கோட்டையை இலக்கு வைத்துள்ளமை தமிழர் தேசத்தை பெரும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் தள்ளியுள்ளது.

கி.மு.200 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், தொல்புரம், பூநகரி, மன்னார் போன்ற பகுதிகளை ஆட்சிசெய்த ஈழத்தமிழ் மன்னனான விஷ்ணுபுத்திர வெடியரசன் காலத்தில் அமைக்கப்பட்டதும், நெடுந்தீவு மண்ணின் கோட்டைக்காடு தமிழர்களின் பண்பாடு மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். ஈழத் தமிழர்கள் இத் தீவின் தொன்மை மிகு குடிகள் என்பதற்கு வெடியரன் கோட்டையும் ஒரு சான்றாகும். அதனையே சிங்களம் இன்று தின்று, ஏப்பம் விடத் துடிக்கிறது.

தமிழர் நிலத்தில் இனப்படுகொலையாளி

அத்துடன் கடந்த சில நாட்களின் முன்னர் ஸ்ரீலங்கா முப்படைகளின் பிரதானி சவேந்திர சில்வாவின் பங்குபற்றுதலுடன் யாழ். நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள சமீத்தி சுமன விகாரையின் கலச திரை நீக்கம் செய்து வைத்துள்ளமை ஸ்ரீலங்கா இராணுவமும் பௌத்த சிங்களப் பேரினவாதமும் ஒரே நிறுவனத்தின் இரு முகங்கள் என்பதை காட்டி நிற்கின்றன. சர்வதேச அளவில் தடை விதிக்கப்பட்டு தண்டனைக்குரிய ஆளாக கருதப்படும் சவேந்திர சில்வா இதனையே தமிழர்களின் பூர்வீக மண்ணில் செய்கிறார் என்பதை உலகம் உணர வேண்டும்.

தமிழ் மக்கள் காலம் காலமாக வாழ்ந்த நாவற்குழியில் தமிழர்களின் காணிகளை ஆக்கிரமித்து அங்கு சிங்களவர்கள், மகிந்த ராஜபக்சவினால் குடியேற்றப்பட்டார்கள். இதனையடுத்து சிங்கள இராணுவமும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் இணைந்து பாரிய பௌத்த விகாரையை அமைத்துள்ளனர். இந்த விகாரையின் கலச திரை நீக்கத்திற்கு இனப்படுகொலையாளி சவேந்திர சில்வா வருகை தந்துள்ளார்.

### இனப்படுகொலையாளியே வராதே

இதேவேளை சவேந்திர சில்வாவின் வருகைக்கு எதிராக ஈழத் தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் தமிழர் தேசத்தில் பௌத்த விகாரை எதற்கு!இனப்படுகொலையாளி சவேந்திர சில்வாவே வெளியேறு! நிறுத்து நிறுத்து பௌத்த மயமாக்கலை நிறுத்து! வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு! நாவற்குழி விகாரை சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பின் அடையாளம்! திட்டமிட்ட பௌத்த மயமாக்கலை நிறுத்து! நாவற்குழி தமிழர் தேசம் !தமிழர் தேசத்தில் புத்த கோயில் எதற்கு! எனக் கோசம் எழுப்பில எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

ஸ்ரீலங்கா அரசு, தமிழர்களின் தேசத்தை ஆக்கிரமிக்க இராணுவத்தை பயன்படுத்துவதுடன் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பையும் இராணுவமே முன்னின்று செயற்படுத்தி வருகின்றது. அத்துடன் தமிழர்களின் மண்ணில் சிங்கள பௌத்த பேரினவாத அடையாளங்களை திணிக்கும் நிலவழிப்பையும் சிங்கள இராணுவம் மேற்கொண்டு வருகின்றது என்பதற்கு சவேந்திர சில்வாவின் நாவற்குழி விஜயம் இந்த உலகத்திற்கு தெளிவாக எடுத்தியம்பியுள்ளமையை அவதானிக்க வேண்டும்.

அத்துடன் கோத்தபாய ராஜபக்ச ஆட்சியில் முன்னெடுத்த ஆக்கிரமிப்புக்கள் மற்றும் இனவழிப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. இன்று ரணில் ஆட்சியில் ரணில் ஆயிரம் கோத்தபாய ராஜபக்சவாக மாறி தமிழர்களை இனவழிப்பு செய்வதையும் தமிழர் நிலவழிப்பை செய்வதையும் உலகம் உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதை நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் வலியுறுத்துகிறது.



# பிள்ளையார் சுழி இடுவது எப்போது?

**-ச.பார்த்தீபன்-**

*“சிறைகாக்குங் காப்புஎவன் செய்யும் மகளிர்*
*நிறைகாக்குங் காப்பே தலை” - குறள் 57*

சர்வதேச மகளிர் தினம் உலகளவில் மார்ச் 8ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இது தொடர்பிலான விசேட நிகழ்வுகளை பெண்கள் மற்றும் பொது அமைப்புகள் நடத்துகின்றன. ஊடகங்களில் விசேட நிகழ்ச்சிகள் ஒளி / ஒலிபரப்பாகும். தனிப்பட்ட ரீதியிலும் ஒவ்வொரு வீடுகளிலும் உள்ள பெண்களை அந்த குடும்பத்தின் ஆண்கள் பரிசுப் பொருட்களை வழங்கியும், விருந்துகளை வழங்கியும் கொண்டாடுகின்றனர்.

எனினும் இந்த தினம் கொண்டாட்டத்திற்கானதா? போராட்டத்திற்கானதா? அல்லது அனுஷ்டிக்க வேண்டிய ஒரு நாளா?

1908ஆம் ஆண்டு 15,000 பெண்கள் நியூயோர்க் நகரத்தின் வழியாக குறுகிய வேலை நேரம், ஊதியம் மற்றும் வாக்களிக்கும் உரிமை ஆகியவற்றைக் கோரி அணிவகுத்துச் சென்றனர். ஒரு வருடத்தின் பின்னர் அமெரிக்காவின் சோசலிஸ கட்சி முதலாவது தேசிய மகளிர் தினத்தை அறிவித்தது. அதன் பின்னர் பல நாடுகள் படிப்படியாக மகளிர் தின நிகழ்வுகளை, பல்வேறு விடயங்களின் அடிப்படையில் நடத்த ஆரம்பித்தன. 1975ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளை சர்வதேச தினமாக அங்கீகரித்தது.

சர்வதேச மகளிர் தினம் சமூகத்தில் பெண்கள் கல்வியிலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும் எந்தளவு முன்னேறியிருக்கின்றார்கள் என்பதை கொண்டாடுகின்ற, சுட்டிக்காட்டுகின்ற அதேவேளை அவர்களுக்கு மறுக்கப்படுகின்ற உரிமைகள், சலுகைகள் என்பவற்றை வலியுறுத்தும் போராட்டங்களை முன்னெடுக்கும் நாளாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது.

2023ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மகளிர் தின தொனிப்பொருள் “டிஜிட்ஓல் பாலின சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம்” என்பதாகும். இந்த தொனிப்பொருள், தொழில்நுட்பம் மற்றும் இணையவழி கல்விக்கு பெண்கள் ஆற்றி வரும் பங்களிப்பை அங்கீகரித்து கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த வருடம் பெண்கள் மற்றும் பெண்களுக்கான சமத்துவமின்மையின் மீதான டிஜிட்டல் பாலின இடைவெளியின் தாக்கத்தையும் சர்வதேச மகளிர் தினம் ஆராய்கிறது. ஏனெனில் சரியான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் 2025ற்குள் பெண்கள் இணைய உலகத்துக்கான அணுகல் இல்லாத நிலை தொடர்ந்தால், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5 ட்ரில்லியன் டொலர் இழப்பு நாடுகளுக்கு ஏற்படும் என ஐக்கிய நாடுகள் சபை கணிப்பிட்டுள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் இணையவழி கல்விக்கு பெண்கள் ஆற்றி வரும் பங்களிப்பை அங்கீகரிப்பதே இந்த வருட மகளிர் தினத்தின் தொனிப்பொருள் எனினும், இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படும் மலையகத் தமிழ் பெண்கள் அன்றாடம் படும் துயரங்களில் இருந்து அவர்களை மீட்பதும், அவர்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதும் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

கல்வி, அரசியல், பொருளாதாரம் என அனைத்து உரிமைகளும் குடும்பத்தினாலும், சமூகத்தினராலும் மறுக்கப்பட்டுள்ள ஒரு இனக்குழுவாக மலையகத் தமிழ் பெண்கள் இன்றும் தமது நாட்களை நகர்த்திக்கொண்டிருக்கின்றனர். இலங்கையில் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு சமூகமாக மலையகத் தமிழர்கள் காணப்படுகின்ற நிலையில், அந்த அடிமை சமூகத்தின் ஆண்களால் அந்த பெண்கள் மேலும் அடிமைகளாக நடத்தப்படுகின்றமை வழமையான விடயமாக மாறியுள்ளது. வருமானத்தை உழைப்பதும், குழந்தைப் பெற்றுக்கொள்வதும் அவர்களை வளர்ப்பதும், வீட்டை பராமரிப்பதும் ஏதோ அவர்களுக்கே உரிய கடமை என்ற மனநிலை இன்றும் அந்த சமூகத்தின் ஆண்களிடம் காணப்படுகிறது. இதற்கு பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன. குறிப்பான தந்தை வழி குடும்பத் தலைமை, தமிழ் மக்களிடையே காணப்படும் பழமையான நம்பிக்கைகள், மறுபுறம் தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளாக மாறியுள்ள அந்த சமூகத்தில் பெண்களுக்கான உரிமைக் குரல்கள் ஒலிக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆணாதிக்க சிந்தனையும், தேர்தலை அடிப்படையாகக் கொண்ட அரசியலும் உரிமைகள் பற்றி என்றுமே பேசியதில்லை.

1931ஆம் ஆண்டு இலங்கையின் அரசாங்க சபைக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக இடம்பெற்ற தேர்தலில் ஹட்டன் தொகுதியில் இருந்து பெரிசுந்தரமும் தலவாக்கலை தொகுதியில் இருந்து எஸ்.பி.வைத்தியலிங்கமும் இந்தியத் தமிழர்கள் சார்பில் தெரிவு செய்யப்பட்டனர். இதுவே மலையகத் தமிழர்களின் பிரதிநிதித்துவ அரசியலுக்கான ஆரம்பமாக அமைந்தது. எனினும் அன்று முதல் இன்றுவரை 90 வருடங்களைக் கடந்த மலையகத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் இதுவரை ஒரு பெண்கூட நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவில்லை.

“மலையகத்தில் வாழும் பெருந்தோட்டப் தமிழ்ப் பெண்களை தொடர்புகொள்வதே கடினமான காரியம். அவர்களை தொடர்புகொள்வதானால் கணவரை அல்லது அவர்களது பிள்ளைகள் அனுமதிக்கும் (வாய்ப்பளிக்கும் பட்சத்திலேயே) பட்சத்திலேயே அவர்களை தொடர்புகொள்ள முடிகிறது. அதனைவிட மலையகத்தில் பெண்கள் அரசியல் சார் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது அவர்களை தவறாக சித்தரிக்கும் போக்கு அந்த சமூகத்திலேயே காணப்படுகிறது. அதனைவிட அந்த மக்கள் வாழும் சமூக கட்டமைப்பும் இதற்கு ஒரு காரணம்.” என்கிறார் சுயாதீன ஊடகவியாளரும், செயற்பாட்டாளருமான கலாவர்சினி கனகரட்னம்.

“மலையகம் 200” என்ற தலைப்பிலான கொண்டாட்டங்களை கடுமையாக விமர்சிக்கும், கலாவர்சினி, உழைத்து ஓடாய் தேய்ந்த பெண்களுக்கான உரிமைகளை மறுக்கும் இந்த சமூகம் இவ்வாறு கொண்டாட்டங்களில் ஈடுபடுவதற்கு எவ்வித அருகதையும் கிடையாது என சுட்டிக்காட்டியுள்ளார்.

மலையகத் தமிழர்களிடையே செல்வாக்குப் பெற்ற அரசியல் கட்சிகளான, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி உள்ளிட்ட கட்சிகள் கூட பல தசாப்தங்களாக தேர்தல் அரசியலில் ஈடுபட்டாலும் ஒரு பெண்ணைக்கூட இதுவரை தேசியப் பட்டியலிலேனும் நாடாளுமன்ற அனுப்ப முயற்சிக்கில்லை. மகளிர் தினத்தையும், மே தினத்தையும் பெரும் எடுப்பில் கொண்டாடும் அந்த கட்சிகள் பெண்களின் அரசியல் உரிமை சார்ந்து எந்தவொரு முற்போக்கான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை என்பதே யதார்த்தம்.

“மலையகத்தின் அரசியல் கட்சிகள் பெண்களின் பெயரை வேட்பாளர் பட்டியலை நிரப்புவதற்கு மாத்திரம் பயன்படுத்திக்கொள்கின்றார்களேத் தவிர உண்மையாகவே அவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்கான நோக்கம் அவர்களுக்கு இல்லை.” என்கிறார் நுவரெலியா - ஹைபொரஸ்ட் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபரான எம்.திலகேஷ்வரன்.


மலையகத்தில் காணப்படும் ஆணாதிக்க சிந்தனை அதனைவிட பெண் ஒருவரை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்வதற்கு வாக்களிப்பதில் காட்டப்படும் தயக்கமும் இதற்கு ஒரு காரணம் என்கிறார் அதிபரான திலகேஷ்வரன்.

“பெண்களுக்கு எதுவும் முடியாது குறிப்பாக பெண்களால் அரசியலில் ஈடுபட்டு மக்களுக்கு சேவையாற்ற முடியாது என்ற பிற்போக்கான எண்ணமே மலையகத் தமிழ் பெண் ஒருவர் இதுரை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாமைக்கு பிரதான காரணம் என்கிறார் கணக்காளராக பணியாற்றும் சந்திரிக்கா காளிமுத்து.

இந்த பிற்போக்குத்தனத்தில் மாற்றம் ஏற்படாதவரையில், 200 அல்ல 300 வருடங்கள் சென்றாலும் பெண் ஒருவர் நாடாளுமன்றத்திற்கு அல்ல பிரதேச சபைக்குக் கூட தெரிவு செய்யப்படமாட்டார் என்கிறார் அவர்.

கடந்த 2015ஆம் ஆண்டு மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனின் புதல்வி அனுஷியா சந்திரசேகரன் அந்த கட்சியில் இருந்து பிரிந்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டாலும் அவரால் வெற்றிபெற முடியவில்லை. இந்த நிலைமை நீடிக்கக்கூடாது. இதில் மாற்றம் வேண்டும். 200 வருட கசப்பான வரலாற்றைக் கொண்ட மலையக தமிழ் மக்களின் 100 வருட அரசியல் வரலாற்றில் ஒரு பெண்கூட நாடாளுமன்றம் செல்லவில்லை என்பதானது, மிகமோசமான பின்தங்கிய நிலைமையையே பறைசாற்றி நிற்கின்றது.

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் ஒன்று இடம்பெறுவதற்கான சமிக்ஞைகள் வெளிப்பட்டுள்ள நிலையில் அதில் மலையகப் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதன் ஊடாக இதற்கு பிள்ளையார் சுழி இடமுடியும் என்பதே பலரது எதிர்பார்ப்பு.





# சீனா போடும் புதிய கணக்கு

-பூலோகன்-

சீனாவுக்கும், அமெரிக்கா மற்றும் ஏனைய மேற்குல நாடுகளுக்கும் இடையில் கடுமையான போட்டா போட்டியில் உள்ளன என்பது வெளிப்படையானது. குறிப்பாக, பொருளாதாரம், ஆயுத, படைபலம் உள்ளிட்ட விடயங்கள் இந்த நிலைமைகள் தீவிரமாக காணப்படுகின்றன.

அண்மைய காலங்களில், அவற்றையெல்லாம் கடந்து, உலகில் தமக்கு எத்தனை ஆதரவு நாடுகள் உள்ளன என்பதன் அடிப்படையிலும், கையிலிருந்து நிலப்பரப்பு, கடற்பரப்பு, வான்பரப்பு அளவுகளிலும் கூட போட்டா போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக இரு தரப்பினரும் பல்வேறு மூலோபாயங்களையும், இருதரப்பு நடவடிக்கைகளையும் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன. குறிப்பாக, இந்தோ, பசுபிக் மூலோபாயத்தை அமெரிக்கா தலைமையிலான மேற்குல அணியும், பாதை மற்றும் மண்டலம் மூலோபாயத்தினை சீனா தனித்தும் முன்னெடுப்பதை உதாரணமாகக் கூறலாம்.

இவ்வாறான நிலையில், சீனத் தலைநகர் பீஜிங்கில் இம்மாதம் 10ஆம் திகதி சீனாவின் சிரேஷ்ட இராஜதந்திரியும், மத்திய வெளியுறவு ஆணையகத்தின் பணிப்பாளருமான வாங் யி முன்னிலையில் ஈரானிய அதியுச்ச தேசிய பாதுகாப்புச் சபையின் செயலாளர் அலி ஷம்கானி, சவூதி அரேபிய இராஜாங்க விவகார அமைச்சர் முஷாட் பின் முஹம்மட் அலி ஐய்பான் ஆகியோர் உறவுகளைப் புதுப்பிக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு ஆரக் கட்டித்தழுவி கைலாகு கொடுத்தனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்ட நிகழ்வானது, இறுதி வரையில் இரகசியமாக வைக்கப்பட்டு நிகழ்வு நிறைவுக்கு வந்ததும் சீனாவின் அனைத்து உத்தியோக பூர்வத் தளங்களிலும் ஒரே தருணத்தில் காணொளிகளாகவும், புகைப்படங்களாகவும் வெளியிடப்பட்டன.

இந்த இடத்தில் சரி,பிழைக்களுக்கு அப்பால் சீனாவைப் பாராட்ட வேண்டித்தான் இருக்கின்றது. ஏனென்றால் சீனா உறவுகளை புதுப்பிக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு வித்திட்டுள்ள தரப்புக்கள் அப்பேர்ப்பட்டவையாக இருக்கின்றன.

1979ஆம் ஆண்டில் ஈரானில் இடம்பெற்ற இஸ்லாமியப் புரட்சியின் பின்னான காலகட்டத்தில், ஈரான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகள் சீரற்றதாகவே நீடிக்கின்றது.

சவூதி அரேபியாவில் சுன்னி முஸ்லிம்களும், ஈரானில் ஷியா முஸ்லிம்களும் அதிகமாக உள்ளனர். இவர்கள் இருதரப்பினருக்கும் இடையில் முட்டிமோதல்கள் நீடித்தவண்ணமே உள்ளன.

கடந்த, 2016ஆம் ஆண்டு சவூதி அரேபியாவில் ஷியா மதகுருக்கள் சிலர் தூக்கில் இடப்பட்ட சம்பவத்தை அடுத்து உருவான கலவரத்தில் தெஹ்ரானில் இருந்த சவூதி அரேபிய தூதுவராலயம் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரியூட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகள் முழுமையாக அற்றுப் போயின. இரு நாடுகளுமே ஒன்றுக்கொன்று நேர் எதிர்த் திசையில் பயணித்தன. இதனால் அந்த நாடகள் எடுக்கின்ற தீர்மானங்களும், கூட்டிணைவுகளும் கூட எதிர் எதிராகவே காணப்பட்டன.

குறிப்பாக, சவூதி அரேபியா அப்பட்டமாகவே அமெரிக்காவுடன் மிக நெருக்கமாக ஊடாடி வருகின்றதொரு நாடாகின்றது. ஈராக் மிகத் தீவிரமாக அமெரிக்காவை வெறுத்து ஒதுக்குகின்றதொரு நாடாக இருக்கின்றது. இவ்வாறான நிலையில், அமெரிக்க சார்ப்பு நிலையில் ஒன்றுக்கொன்று எதிரான இரு நாடுகளை, சீனா தலையீடு செய்து ஒற்றுமைப்படுத்தியிருக்கின்றது என்பது பெரும் சாதனை தான்.

அதுவும், அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் பலவும் அறிந்திருக்காத வகையில் ஒப்பந்தம் வரையில் விடயத்தினை காய்நகர்த்தி ஈற்றில் அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றது என்பது சீனாவின் இராஜதந்திரச் செயற்பாடுகளுக்கு கிடைத்த மகத்தான வெற்றி தான். ஆனால், இந்த உறவுகளைப் புதுப்பிக்கும் ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான நடுநிலையாளராக இருந்தமை அல்லது ஒற்றுமைப்படுத்தலுக்கான மத்தியஸ்தம் வழங்கியமை உள்ளிட்ட செயற்பாடுகளால் சீனா அடையப்போகும் நன்மை என்னவென்று சற்றே அலசிப்பார்த்தால் கூட எதுவுமே இல்லை என்று தான் கூறப்படுகின்றது.

வெறுமனே முரண்பாடுகள் நிறைந்த இரு தரப்பினை எந்தவிதமான பிரதிபலனையும் கருத்தில் கொள்ளாது சீனா மத்தியஸ்தம் வகித்து இணைத்து வைத்துள்ளது என்று அவ்விடயத்தினை பொதுப்படையாகவே பல ஆய்வாளர்களால் நோக்கப்படுகின்றது. ஆனால், சீனா இந்தச் செயற்பாட்டின் பின்னால் திட்டமொன்றை வைத்திருக்கின்றது.

அத்திட்டத்தினை எளிதாக புரிந்து விடமுடியாது. சற்றே ஆழமாக பார்க்கையில், சீனாவைப் பொறுத்தவரையில் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை மீறப்படும் நாடாகவே சித்தரிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் ஜனநாயக விழுமியங்களை பின்பற்றாதவொரு சார்வதிகாரப் போக்குகள் அதிகம் நிறந்த நாடாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதனை அந்த நாடும் ஒருகட்சி ஆட்சி முறைமையால் உறுதி செய்தும் உள்ளது.

அதுமட்டுமன்றி, ஷின்ஜியாங்கில் சீனா உய்குர் இன முஸ்லிம்களை ‘இனப்படுகொலை’ செய்து வருவதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாக அதீத வளர்ச்சியைக் கொண்டிருந்தாலும், இவ்விதமான செயற்பாடுகளால் சீனாவுக்கு உலகளாவிய ரீதியில் ‘கறை’ படிந்த நிலைமையொன்று நீடித்துக்கொண்டே உள்ளது. இவ்வாறான நிலையில் தான் சீனா தன்னையொரு ‘ஜனநாயக விரும்பியாக’, ‘ஜனநாயக காப்பாளனாக’ காண்பிப்பதற்கு முனைகின்றது.

அதற்காக, மோதல்கள், முரண்பாடுகள் உள்ள தேசங்களில் தலையீடுகளைச் செய்து ஈற்றில் சமாதானப்படுத்தல்கள், ஒற்றுமைப்படுத்தல்கள் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது.

முன்னதாக, உக்ரேனும், ரஷ்யாவும் கடுமையாக போரிட்டு வரும் நிலையில் ஆரம்பத்தில் உலக ஒழுங்கின் பிரகாரம் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் உக்ரேனுக்கு பக்கபலமாக இருக்கும் நிலையில், சீனாவும், வடகொரியாவும் ரஷ்யாவிற்கு உறுதுணையாக இருக்கும் என்றே கணிக்கப்பட்டது.

ஆனால், அந்த கணிப்பு நடைமுறையில் நிகழவில்லை. சீனா குறித்த போரில் நடுநிலை பாத்திரத்தினையே வகித்தது. அதுமட்டுமன்றி போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இவ்வாறன நிலையில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக, நீண்டுகொண்டிருக்கும் உக்ரேன், ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு 12 அம்சங்கள் அடங்கிய சமாதானப் பரிந்துரையொன்றை முன்மொழிந்தது. குறித்த பரிந்துரைகள் உலகளாவிய நாடுகள் அனைத்தையும் மூக்கின் மேல் விரலை வைப்பதற்கு காரணமாகியிருந்தது.

அதுமட்டுமன்றி, சீனாவின் இத்தகைய செயற்பாட்டை உள்ளீர்த்து உறைநிலையிலிருந்து மீள்வதற்குள் உலகத்துக்கு மற்றொரு அதிர்ச்சியை சீனா மேற்படி ஒப்பந்தம் கைச்சத்திடுவதற்கு காரணமாகியுள்ளதன் மூலமாக உலகிற்கு வழங்கியிருக்கின்றது.

அதுமட்டுமன்றி, ஒட்டுமொத்த உலகமும் சீனா தொடர்பில் செய்துள்ள கணிப்பு தவறானது என்ற செய்தியையும் சொல்லாமல் சொல்லியிருக்கின்றது. இதன் மூலமாக சீனா ஒட்டுமொத்த உலகத்தின் தலைமைத்துவத்தையே இலக்கு வைக்கின்றது என்பது ஓரளவேனும் உய்தறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

பொருளாதார ரீதியில் முன்னேற்றங்களை விரைவாக அடைந்து வரும் சீனா, தற்போதைய சூழலில் யாருடனும் பகை பாராட்டாது இணக்கமான பரஸ்பர இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவே விரும்புகின்றது.

அதன்மூலமாக, குறித்த நாடுகளின் சந்தை வாய்ப்பினை நோக்கி இலகுவாக நகர முடியும் என்பது சீனாவின் உள்ளகத் திட்டம். அவ்வாறு சந்தை வாய்ப்புக்கள் பல்கிப் பெருகுகின்றபோது இயல்பாகவே பொருளாதார ரீதியாக பேரெழுச்சி கொள்ளும் நிலைமையொன்று உருவாகும்.

அதன்மூலமாக ஒட்டுமொத்த உலகத்திற்கும் தலைமையை ஏற்பதோடு, வல்லரசு நாடாக தலைநிமிர்ந்து நிற்கவும் இயலுமானதாக இருக்கும். எனவே தான் சீனா இப்போது முரண்பாடுகளுக்கு மத்தியஸ்தம் வகிக்கும் புதிய இராஜதந்திர மூலோபயத்தினை கையிலெடுத்துள்ளது.

தொடர்ச்சியாக இந்த மூலோபாயம் வெற்றிபெறும் பட்சத்தில் சீனா, ஆதிக்க மைய எல்லையை நிச்சயமாக விரிவு படுத்தும். அதன்போது சில அபிவிருத்தி அடைந்துவரும் மூன்றாம் தர நாடுகள் விரும்பியோ விரும்பாமலோ சீனாவின் கட்டுக்குள் நிற்க வேண்டிய நிலைமைகள் இயல்பாகவே ஏற்பட்டு விடும்.

அவ்விதமான நிலைமையானது, அமெரிக்காவின் உலக நாடுகளுக்கான தலைமை மற்றும் தனி வல்லரசு ஆகிய வகிபாகங்களை இலகுவாக தட்டிப்பறித்து விடும். அப்போது அமெரிக்காவினால் ஏதுவும் செய்யமுடியாத கையறு நிலைமையே ஏற்படும்.

ஆக, சீனா மத்தியஸ்தராக, நடுநிலையாளராக, சமாதான தூதுவராக போர்த்தியிருக்கும் போர்வையானது தனது உலகத்தலைமைக் கனவை நனவாக்குவதற்கான ஒரு உபாயமே என்பதை மறந்து விடக்கூடாது. ஆனால் சீனாவின் இந்த புதிய மூலோபய நகர்வினை அமெரிக்கா உள்ளிட்ட இதர மேற்குல நாடுகள் எவ்வாறு கையாளப்போகின்றன என்பது தற்போதுள்ள பெருங்கேள்வியாகும்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
மார்ச் 2023






நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இம்முறை கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் வேண்டுகோளிற்கு இணங்க தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களிற்கு வாழ்வாதார உதவிகள் வழுங்கிவைக்கப்பட்டன.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் இலண்டனிலிருந்து நேரடியாக சிறிலங்காவுக்கு வந்த றோய் ஜக்சன் யேசுதாசன் அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களிற்கு உதவிப்பொருட்கள் கையளிக்கப்பட்டன.

அந்தவகையில் தெரிவு செய்யப்பட்ட 11 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் 12 மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்களும் வழக்கப்பட்டதுடன் Rice Cooker மற்றும் Grinder ஆகியன தலா இரு குடும்பத்திற்கும் Gas cooker ஒரு குடும்பத்திற்கும் வழுங்கி வைக்கப்பட்டன.